KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 24 April 2026 இதழ்:- 16

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தமிழத் தலைவர்களிடையே ஒற்றுமை மிக அவசியம்! சி.வி.கே.சிவஞானம் - ஸ்ரீதரன் கரங்களைப் பற்றியபடி இந்திய துணை ஜனாதிபதி உருக்கமாக வேண்டுகோள்



தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை மிகவும் அவசியம் என்று இந்திய துணை ஜனாதிபத சி.பி.இராதாகிருஷ்ணன் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் அக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆகியோரின் கரங்களைப் பற்றியவாறு குறிப்பிட்டுள்ளார்.

வட கிழக்கைப் பிரதிநிதித்துவம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணனுக்கும் இடையிலான சந்திப்பு 19ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை தாஜ்சமுத்திரா விடுதியில்(7ம் பக்கம் பார்க்க)

# மாகாண ஆட்சிக் கூடாரத்தில் குடியேறும் கிராம ராஜ்யம்!

# ஹோர்முஸ்:- அமெரிக்காவின் முற்றுகையை உடைத்து வெளியேறிய 34 ஈரான் கப்பல்கள்!





# நாவற்குழி விகாரையின் பிக்கு பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டில் கைதானமைக்கு சுமந்திரன் காரணமாம்

பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டில் கைதான நாவற்குழி விகாரை பிக்கு கைது செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் செயலாளர் முன்னின்று செயற்பட்டுள்ளதாக தென் னிலங்கையில் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப் பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி நாவற்குழி விகாரையில் பிக்கு ஒருவருக்கு எதிராக முன்னெடுக்கப் பட்ட சட்ட நடவடிக்கை திட்டமிட்ட ஒரு சதியாகும். ஒரு மதத் தலத்திற்குரிய ஆடை ஒழுக்கத்தை மீறி பிரவேசிக்க முயன்ற யுவதிக்கு அறிவுறுத்தியதற்காக, பிக்கு மீது பாலியல்(8ம்பக்கம் பார்க்க)

THINKING OF
SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
Your neighborhood sales representative

PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!



RE/MAX ACE REALTY INC., BROKERAGE
EXPERIENCE THE DIFFERENCE
INDEPENDENTLY OWNED & OPERATED
we are ace


Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com


Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com





23 Years Real Estate Experience
150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
Bus: 416-293-4500


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Adelaide Ave E / Simcoe St**

Oshawa $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


**Kingston Rd & Sheppard Ave E**

Scarborough $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


**Islington Ave / Steeles Ave W**

Toronto $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

**Neilson Road & Sheppard**

Scarborough $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

**Danforth and Dawes**

Toronto $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

**Williamson & Westney**

Ajax $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

**Rogers and Dufferin St**

Toronto $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


**Markham Rd & Lawrence Ave**

Scarborough $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow


**Harmony Road / Conlin Road**

Oshawa $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

**Cameo St / Burkolder Dr**


Pickering $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

**Hwy10 / Hwy 89**

Shelburne $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

**Markham/Steeles**

Markham $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

**Markham Rd/ Lawrence Ave E**
FOR LEASE

Scarborough $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

**Markham Rd & Sheppard Ave**
FOR LEASE

Scarborough $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

**Simcoe St/ Windfields Farm Dr**
FOR LEASE

Oshawa $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

**Markham & Denison**
FOR LEASE

Markham $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# நெஞ்சம் நிறைந்த ஈசன் அண்ணா! மண்ணில் இருந்து விடை பெற்றார்!

நெஞ்சம் நிறைந்த ஈசன் அண்ணா!

மண்ணில் இருந்து விடை பெற்றார்!

(கௌரிஈசன் – இராசநாயகம் – நெல்லியடி)

ஈசன் அண்ணா! ஒரு மனிதர் அல்ல. ஒரு மானுட விடுதலைப் போராளி அவர்.

ஈசன் அண்ணையை இழப்பது என்பது ஒரு உயிரை இழப்பதல்ல. ஒரு சமூகத் தையே இழப்பதற்கு நிகரானது. அந்த சமூகமே இன்று நம்மிடமிருந்து தனது மூச்சை நிறுத்திக் கொண்டது.

நெஞ்சம் நெகிழ வைக்கும் நினைவு களின் நடுவே அவரைப் பற்றிக் கூறத் தொடங்கும் ஒவ்வொரு சொல்லும் ஒரு கண்ணீர்த் துளியாக மாறுகின்றது. அவர் எனக்கு ஒரு சாதாரண நண்பர் அல்ல. என் நெஞ்சத்துக்கு நெருக்கம் கொண்ட உறவினர்களை விட மேலான வர்.



நினைத்தாலே நெஞ்சை நிரப்பும் நம்பிக்கையின் உருவம். தமிழ்த்தேசியம் என்ற சொல்லை வார்த்தைகளில் மட்டும் அல்ல வாழ்வின் சொத்தாகக் கருதியவர் ஈசன் அண்ணா.

அது அவருக்கு ஒரு அரசியல் கோட் பாடு அல்ல. ஒரு உயிர்ப் பற்று அல்ல. அது அவரின் சுவாசம் அவரின் இரத்த ஓட்டம். விடுதலைப் போராட்டம் அவருக்கு எட்டாத தொலைவில் நிகழ்ந்த ஒரு செய்தி அல்ல. அவரின் குடும்பத்தின் உள்ளங் கையில் எழுதப் பட்ட வரலாறு.

தன் சொந்தத் தம்பியை எம் விடுதலைப் போராட்டத்தில் இழந்து வேதனையில் நின்றவர். ஆனால் அந்த இழப்பு அவரை நிலை குலைய வைக்க வில்லை. மாறாக அவர் உள்ளத்தில் அர்ப்பணிப்பின் தீயை மேலும் எரிய வைத்தது.

அவரது குடும்பம் ஒரு வீடு அல்ல. அது ஒரு உறுதியின் உறைவிடம். ஒரு அர்ப்பணிப்பு மிக்க ஒரு தூண். விடுதலைக்கான போராட்டத்தில் அந்த குடும்பம் நின்ற விதம் வரலாற்றில் எழுதப்பட வேண்டிய ஒன்று.



ஈசன் அண்ணா சத்தமில்லாமல் செயலில் நின்றவர். அல்ல. சத்தமாகச் சொல்வதை சத்தமின்றி செயலில் காட்டியவர். புகழ் தேடாமல் பணியில் மூழ்கியவர்.

ஆரம்பக் காலங்களில் அதிக நெருக்கடி சூழ்ந்த நாட்களில் விடுதலைப் போராட் டத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் அமைதியான ஆதரவாக இருந்தவர். அவர் கதைத்ததை விட அவர் செய் தவை அதிகம். அவர் மறைமுகமாக களம் பல ஆடியவர்.

ஈழநாடு பத்திரிகையின் ஆரம்பப் பயணத்தில் அவர் ஒரு பார்வையாளர் அல்ல. எனக்கு ஒரு துணையாக ஒரு தூண்டலாக ஒரு தாங்கு கல்லாக என் பின்னால் நின்ற அந்த அமைதியான சக்தி அவரே.

15 ஆண்டுகளுக்கு முன் தாயகத்தில் போரால் பாதிக்கப்பட்ட தாயகத்தின் குழந்தைகளுக்கு ஈழநாடு பத்திரிகை நாளாந்தம் உணவளித்து வாழ்வளிக்க முன் வந்தபோது வலக்கரமாகச் செயற் பட்டவர் ஈசன் அண்ணா! 15 ஆண்டு களுக்கு முன்னால் என் இப்பணிக்கு. உதவிக்கரம் நீட்டுவது எளிதல்ல. என்று பலர் ஒதுங்கி நின்ற வேளையில் என் அருகில் துணிச்சலோடு ஈசன் அண்ணா அதை ஒரு கடமையாக அல்ல, ஒரு கருணையின் செயலாகக் கருதி நின்றவர்களில் ஒருவர்

அவரின் உதவி எனக்கு நம்பிக்கை விதைத்தது. அவரை நினைத்தால் என் மனம் கூறுவது ஒன்று இத்தகைய மனிதர்கள் இழக்கப்படக் கூடாது என்பதே.

ஆனால் வாழ்க்கை அப்படி கேட்காது. அது எடுத்துச் செல்லும் போது மிகச் சிறந்தவர்களையே முதலில் எடுத்துச் செல்கிறது.

ஈசன் அண்ணவின் மறைவு ஒரு குடும்பத்தின் துயரம் மட்டும் அல்ல. ஒரு நண்பனின் இழப்பு மட்டும் அல்ல. ஒரு சமுதாயத்தின் வெற்றிடமாகும். எங்கள் நண்பர்கள் வட்டத்தில் மா பெரும் வெற்றிடத்தை ஈசன் அண்ணா விட்டுச் செல்கின்றார்.

இன்று நாம் இழந்தது ஈசன் அண்ணா என்ற ஒரு உயிரை அல்ல ஒரு நேர்மை. ஒரு அர்ப்பணிப்பு ஒரு இலட்சியம் கொண்ட மானிடனை.

ஈசன் அண்ணா போன்றவர்கள் மண் ணில் மறைந்தாலும் பழகியவர்கள் மனங்களில் மறைய மாட்டார்கள்.

அவரது பாதை அவரது நினைவு அவரது அர்ப்பணிப்பு எப்போதும் நமக்கு வழிகாட்டி யாகவே இருக்கும்.

அவரை இழந்த துயரத்தில் நின்று ஒரு வாக்குறுதி அளிக்கலாம் அவர் நேசித்த விடுதலை அவர் வாழ்ந்த இலட்சியம்

அவர் தாங்கிய தமிழ்த்தேசிய உணர்வு நம்முள் தொடரட்டும்.

அவரது நினைவு நம் நெஞ்சில் ஒரு நிழல் அல்ல ஒரு பாசப் பிணைப்பு

ஈசன் அண்ணா!

நீங்கள் மீண்டு வரா உலகிற்குச் சென்று விட்டீர்கள். ஆனால் நீங்கள் இந்த மண் ணில் விட்டுச் சென்ற நட்பும் – அன்பும் பாசமும் இன்னும் எங்களை வழி நடத்துகிறது! எம் உயிருள்ள வரை உங்கள் நினைவுகள் தொடரும். இறை வன் திருவடியில் நிம்மதியாய் நீடுதுயில் கொள்ளுங்கள். நாம் வரும் போது அவ்வுலகக் கதை சொல்ல நிறையவே கதை வைத்திருங்கள்.

நினைவழியா நினைவுகளுடன்

T.K. பரமேஸ்வரன்

ஆசிரியர் – ஈழநாடு

### ஈசன் அண்ணாவின் இறுதி நிகழ்வு பற்றிய அறிவித்தல்

**இடம்:–** Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1

**காலம்** 25 ஏப்ரல் 2026 சனிக்கிழமை

**நேரம்:–** மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் 26 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் 9.00 மணி வரை மீண்டும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து 9.00 மணி வரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று11.30 மணிக்கு மணிக்கு 12492 Woodbine Ave இல் அமைந்து ள்ள Highland Hills Crematorium மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

– தகவல்:– குடும்பத்தினர்

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# ஹோர்முஸ்:- அமெரிக்காவின் முற்றுகையை உடைத்து வெளியேறிய 34 ஈரான் கப்பல்கள்!



ஹோர்முஸ் நீரிணையை அமெரிக்கா முற்றுகையிட்டுள்ள போதிலும் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல், அதன் கட்டுப்பாட்டை மீறி, 34 ஈரான் கப்பல்கள் எல்லை தாண்டிச் சென்றுள்ளதாக பைனான்ஷியல் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஹோர்முஸ் நீரிணை இப்போது அமெரிக்காவின் முழுமையான கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், ஈரான் மீதான கடல்சார் முற்றுகை உத்தி 'மிகப்பெரிய வெற்றி' அடைந்துள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

ஈரானுடன் இறுதி ஒப்பந்தம்' எட்டப்படும் வரை இந்தத் தடைகள் நீக்கப்படாது என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இந்நிலையில், பைனான்ஷியல் டைம்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவின் இந்த முற்றுகையை மீறி ஈரானுடன் தொடர்புடைய சுமார் 34 கப்பல்கள் தடையின்றிப் பயணம் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முற்றுகையை மீறிச் சென்ற 34 கப்பல்களில் 19 கப்பல்கள் ஈரானுடன் தொடர்புடையவை. இவை வளைகுடாவிலிருந்து வெளியேறி விட்டன.

ஏனைய 15 கப்பல்களும் அரபிக் கடலிலிருந்து வளைகுடாவுக்குள் நுழைந்து ஈரானை நோக்கிச் சென்றுள்ளன. வெளியேறிய கப்பல்களில் குறைந்தது 6 கப்பல்கள் ஈரானிய மசகு எண்ணெயை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த 6 கப்பல்களிலும் மொத்தமாக சுமார் 10.7 மில்லியன் பீப்பாய்களில் எண்ணெய் இருந்ததாகக் கூறப்படுகிறது. பொதுவாக ப்ரெண்ட் (Brent) மசகு எண்ணெய் விலையை விட சர்வதேச பொருளாதாரத் தடைகள் காரணமாக ஈரானிய எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு சுமார் 10 டொலர் குறைவாக விற்கப்படுகிறது. இந்த அடிப்படையில், தடையை மீறிச் சென்ற இந்த எண்ணெய் மூலமாக ஈரானுக்கு சுமார் 910 மில்லியன் டொலர் வருவாய் கிடைக்கும் என மதிப்பிடப்படுகிறது.

ஏப்ரல் 13ஆம் திகதி ஈரான் மீதான பொருளாதார வர்த்தகத்தை முடக்கும் நோக்கில் அமெரிக்கா, ஹோர்முஸ் நீரிணையை முற்றுகையிடுவதாக அறிவித்தது. போர் நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடிய பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் பரிமாற்றத்தைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கம்.

முற்றுகையிட்டதிலிருந்து இதுவரை ஓமன் வளைகுடாவில் ஒரு சரக்குக் கப்பலை மட்டுமே அமெரிக்கப் படைகளால் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடிந்தது. இந்தோ - -பசிபிக் பிராந்தியத்தில் ஒரு எண்ணெய் கப்பல் சோதனையிடப்பட்டது.

இதுவரை ஹோர்முஸ் நீரிணையில் பயணிக்கவிருந்த 28 கப்பல்களை அமெரிக்கா திருப்பி அனுப்பியுள்ளதாக அமெரிக்க மத்திய கட்டளையகமானது (CENTCOM) தெரிவித்துள்ளது.

இத்தனை அச்சுறுத்தலுக்கும் ஆபத்தான் சூழ்நிலைக்கும் மத்தியில் அமெரிக்காவின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு ஈரானுடன் தொடர்புடைய 34 கப்பல்கள் கடந்து சென்றிருப்பது சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாகியிருக்கிறது.

### கண்ணிவெடிகளை அகற்ற 6 மாதம்?

இதேவேளை ஹோர்முஸ் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஆறு மாதங்கள் வரை ஆகலாம் என பென்டகன் மதிப்பீடு தெரிவிக்கிறது.

போர் முடிவடைந்தவுடன், ஈரான் புதைத்த கண்ணிவெடிகளை ஹோர்முஸ் நீர் வழிச் சந்தியிலிருந்து முழுமையாக அகற்றுவதற்கு ஆறு மாதங்கள் வரை ஆகலாம் என்று அமெரிக்க சட்டமியற்றுபவர்களுடன் பகிரப்பட்ட பென்டகனின் மதிப்பீட்டை மேற்கோள் காட்டி, வாஷிங்டன் போஸ்ட் புதன்கிழமை செய்தி வெளியிட்டது.

உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெயையும், அதன் இயற்கை எரிவாயுவின் பெரும்பகுதியையும் கடத்தும் ஒரு முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதையான இந்த நீரிணை, ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலியப் போர் தொடங்கியதிலிருந்து பெருமளவில் மூடப்பட்டிருப்பதால், எரிசக்தி விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன .

போஸ்ட் பத்திரிகையின் அறிக்கையின் படி ஈரான் அந்த நீர்வழிப்பாதையிலும் அதைச் சுற்றியும் குறைந்தது 20 கண்ணிவெடிகளைப் புதைத்திருக்கக் கூடும் என்றும் அவற்றுள் சில ஜிபிஎஸ் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைவிலிருந்து மிதக்கவிடப்பட்டிருப்பதால் அவற்றைக் கண்டறிவது கடினமாக உள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு இரகசியக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

போர் முடிவதற்குள் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என பென்டகனின் மதிப்பீடு தெரிவித்தது. இருப்பினும், பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஷான் பார்னெல் அந்தச் செய்தித்தாளிற்கு அளித்த பேட்டியில், அதன் தகவல் தவறானது என்று கூறினார்.

ஈரானின் புரட்சிகரப் பாதுகாப்புப் படை, கண்ணி வெடிகள் இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் 1,400 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான அபாய மண்டலத்தை அறிவித்துள்ளது.



# எரிசக்திவள அமைச்சரின் பதவி விலகலும் அநுராவின் புதிய அரசியல் கலாச்சாரமும்

சக்திவள அமைச்சர் அமைச்சர் குமார ஜெயக்கொடியின் பதவி விலகல் அவரது அமைச்சுப் பதவி தொடர்பாகப் பல வாரங்களாக நிலவி வந்த சர்ச்சைகளைத் தொடர்ந்து இடம் பெற்றிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் உரக் கூட்டுத்தாபனத்தில் அரசாங்க அதிகாரியாக அவர் பணியாற்றிய போது இடம் பெற்ற பணப் பரிமாற்றம் தொடர்பாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து இந்தச் சர்ச்சை தீவிரமடைந்தது.

மற்றொரு விவகாரம் ஒரு புதிய விநியோகத்தரிடமிருந்து தரங் குறைந்த நிலக்கரியை அரசாங்கம் கொள்வனவு செய்தமையாகும். நிலக்கரி மற்றும் எரிபொருள் கொள்வனவுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சர் ஜெயக்கொடி பதவி விலகினார். அவரும் அவரைத் தொடர்ந்து பதவி விலகிய சக்திவள அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபாலவும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படவிருக்கும் விசாரணையின் சுயாதீனத்துக்கு தடையாக இருக்க விரும்பவில்லை என்று கூறியிருக்கின்றனர்.

அதிக செலவிலான இந்த நிலக்கரிக் கொள்வனவு தொடர்பில் அமைச்சரைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு அரசாங்கம் ஆரம்பத்தில் காட்டிய எதிர்ப்பு, 'நிலக்கரி கொள்வனவுக்கு கட்டளை பிறப்பித்ததில் உத்தியோகபூர்வ நடைமுறைகளே பின்பற்றப்பட்டன' என்ற வாதத்தின் அடிப்படையிலானது. ஆனால் தற்போதைய சந்தர்ப்பத்தில் வெளிச்சத்திற்கு வந்துள்ளதைப் போன்று ஒரு பாதகமான கொள்வனவுக்கு இடமளிக்கும் வகையில் உத்தியோகபூர்வ நடைமுறைகள் இருப்பது அந்தச் செயன் முறையில் உள்ள பலவீனத்தையே காட்டுகிறது.

இந்த அவதானிப்பைத் தொடர்ந்தே, 2009ஆம் ஆண்டிலிருந்த செய்யப்பட்ட நிலக்கரிக் கொள்வனவுகளை ஆராய்வதற்கு அரசாங்கம் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருக்கிறது. இந்தக் காலப்பகுதியில் 450 கொள்வனவுகள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் பல கொள்வனவுகள் தற்போதைய நிலக்கரி கொள்வனவைப் போன்றே நாட்டுக்குப் பாதகமாக அமைந்திருந்தால், அதனால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பை கற்பனை செய்தே பார்க்க முடியாது. கடந்த கால உத்தியோகபூர்வ அரசாங்க நடைமுறைகளில் இருந்த ஓட்டைகள், நாட்டுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தித் தனிநபர்கள் வளமடைய அனுமதித்திருக்கலாம் என்ற சாத்தியப்பாடுகள் இருப்பதாலும் 2009 ஆண்டு முதல் விசாரணைகளை முன்னெடுப்பது அவசியமாகிறது.

நிலக்கரி மற்றும் எரிபொருள் கொள்வனவுகள் பெரும்பாலும் அவசர அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் அவை முழுமையான கேள்விப்பத்திர நடைமுறைகளைத் தவிர்த்து 'அவசரகால கொள்முதல்' (Emergency Procurement) முறையைப் பயன்படுத்த வழி வகுத்ததாகக் கடந்த காலங்களில் கவலைகள் வெளிப்படுத்தப்பட்டன.

ஊழலை ஒழிப்பதை அரசாங்கம் அதன் முன்னுரிமையாகக் கொண்டுள்ளது. அதன் விளைவாக, இத்தகைய ஊழல்களுக்கு இடமளித்த அமைப்புக்களைச் சீர்திருத்த அரசாங்கம் தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பொறுப்புக்கூறல் என்பது எதிர்காலத்தில் ஊழலற்ற நடைமுறைகளை உறுதி செய்வது மட்டுமல்லாமல், கடந்த கால ஊழல் நடைமுறைகள் தொடராமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கில் பின்னோக்கியும் பார்ப்பதாக அமைய



வேண்டும். முன்னைய அரசாங்கங்களில் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு தலைமை வகித்தவர்களுக்கு இது கவலைக்குரிய விடயமாக இருக்கும். அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தியவர்கள், கடந்த காலத்தைப் பற்றிய எந்தவொரு விசாரணையையும் எதிர்க்கத் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

## அரசியல் சாதுரியம்

வெறைற் றிசேர்ச் (Verité Research) அமைப்பினால் 2026 பெப்ரவரியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பிரதிபலிக்கப்பட்டவாறு, பொதுமக்களிடையே அரசாங்கத்தின் செல்வாக்குத் தொடர்ந்து நீடிப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, ஊழல் பிரச்சினையைத் தீர்ப்பதில் அது காட்டும் அக்கறையாகும். இலங்கைக் குடிமக்களின் முதன்மையான கவலைகளில் ஒன்றாக ஊழல் இருந்து வருவதைப் பொதுக் கருத்து ஆய்வுகள் தொடர்ந்து காட்டுகின்றன.

முன்னைய அரசாங்கங்களின் உறுப்பினர்கள் கைது செய்யப்படுவதும் அவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதும் ஊழலற்ற சமூகத்தை நோக்கிய பாதையாகப் பொதுமக்களால் திருப்தியுடன் பார்க்கப்படுகிறது.

அதே வேளை அமைச்சர் குமார ஜெயக்கொடியினதும் அமைச்சின் செயலாளர் ஹேமபாலவினதும் பதவி விலகல்கள் அரசாங்க உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்கள் வரம்புகளை மீறினால் தப்பிச் செல்ல முடியாது என்பதற்கான அறிகுறியாகும். இது ஒரு முக்கியமான செய்தியாகும், ஏனெனில் பொது மக்களின் நம்பிக்கை என்பது அரசியல் எதிரிகளைப் பொறுப்புக் கூறச் செய்வதில் மாத்திரமல்ல, தனது சொந்த அணிகளுக்குள்ளும் நீதியையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.

அமைச்சர்களைப் பதவி விலகக் கட்டாயப்படுத்தும் வகையில், அரசாங்கத் தலைவர்களைக் குறிவைத்து ஊழல் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் ஒரு தந்திரோபாயத்தை எதிர்க்கட்சிகள் கையாள்வது போன்று தெரிகிறது. ஏனைய அமைச்சர்களுக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டங்களும் அவர்களின் வீடுகளுக்கு முன்னால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்து வருகின்றன. எதிர்க்கட்சியின் இந்தத் தந்திரோபாயத்திற்குப் பணிய விரும்பாத அரசாங்கம், விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை அமைக்கும் வரை அமைச்சர் ஜெயக்கொடியின் பதவி விலகலைத் தாமதப்படுத்தியது. இது அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் நெருக்குதல்களுக்கு பணிந்தது போன்ற தோற்றம் ஏற்படாமல், அமைச்சர் தனது பதவியிலிருந்து விலக வழிவகுத்தது.

அரசியல் ரீதியாக நோக்கும் போது , இது பொறுப்புக்கூறலின் தேவையையும் அதேசமயம் நிர்வாகத்தில் அதிகாரத்தையும் ஒருமைப்பாட்டையும் பேண வேண்டிய தேவையையும் சமநிலைப்படுத்தும் ஒரு கணிப்பீட்டுடன் கூடிய நடவடிக்கையாகும்.

நிலக்கரிக் கொள்வனவுப் பிரச்சினையில் அவதானத்தைச் செலுத்த வலியுறுத்தும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை, தேசிய விவாதத்தை, கடந்த கால ஊழல்களிலிருந்து தற்போதைய சர்ச்சைகளை நோக்கித் திசைதிருப்பும் ஒரு முயற்சியாகவும் நோக்கப்படலாம். தங்கள் மீதான கடந்த கால ஊழல் குற்றச்சாட்டுகளின் அழுத்தத்தைக் குறைத்து, தற்போதைய அரசாங்கத்தின் மீது விசாரணைகளைத் திசை திருப்புவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன

இந்நிலையில் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்ததுடன் அமைச்சரையும் செயலாளரையும் பதவி விலகச் செய்தமை, ஊழலை சகித்துக்கொள்ளப் போவதில்லை என்பதைக் காட்ட அரசாங்கம் கையாண்ட ஒரு அரசியல் சாதுரியமாகும்.

இது கடந்த கால அரசாங்கங்களில் நிலவிய ஊழல்களைப் பொதுமக்களுக்கு நினைவூட்டவும் உதவும், இதனால் அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஊழல் குற்றச்சாட்டுகள் மக்களிடையே வலுப் பெறுவது தடுக்கப்படும்.

## புதிய நடைமுறை

குற்றவாளியாக நிரூபிக்கப்படாத நிலையில், குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் ஒரு அரசாங்க அமைச்சர் பதவி விலகுவது என்பது இலங்கையில் இன்னும் ஒரு புதிய நடைமுறையாகவே உள்ளது. இலங்கையில் இதுவரை நிலவி வந்த பொதுவான நடைமுறை என்னவென்றால், அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தவறு செய்ததாகக் கண்டறியப்பட்டால், அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக இடமாற்றம் செய்வதாகும். பொலிஸ் அதிகாரிகள் அதிகப்படியான பலத்தைப்



**கட்டுரையாளர்:
கலாநிதி
-ஜெகான் பெரேரா-**

பிரயோகித்தாலோ அல்லது துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டாலோ, அவர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக வேறொரு நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவதை நாம் பொதுவாகக் காண்கிறோம்.

இதே போன்ற ஒரு நடைமுறையை முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் விடயத்திலும் காணக்கூடியதாக இருந்தது. அவர் சுகாதாரத் துறையில் ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட போது அரசாங்கத்திலிருந்து நீக்கப்படாமல் வேறு ஒரு அமைச்சுப் பதவிக்கு மாற்றப்பட்டார்.

இப்பின்னணியில், தற்போதைய பதவி விலகல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இது கடந்த கால நடைமுறைகளிலிருந்து விடுபட்டு பொதுப் பதவிகளில் ஒரு உயர்ந்த நடத்தை தரத்தை நிலை நாட்டும் விருப்பத்தைச் சுட்டிக் காட்டுகிறது. எவ்வாறாயினும், ஒரு தனிப்பட்ட நிகழ்வு மட்டுமே நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்திவிடாது. அரசியல் சார்பு அல்லது வசதிகளைப் பாராமல், அனைத்து விடயங்களிலும் இதே கொள்கை சீராகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இங்கு தான் அரசாங்கம் அதன் நம்பகத்தன்மையை வலுப்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பு இருக்கிறது . முன்னைய அரசாங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பயன்படுத்தப்படும் அதே பொறுப்புக்கூறல் நியமங்களை அதன் சொந்த உறுப்பினர்களுக்கும் பயன்படுத்துவதை உறுதி செய்வதன் மூலம், நல்லாட்சிக்கான தனது அர்ப்பணிப்பு பாரபட்சமற்றது என்பதை அரசாங்கத்தினால் நிரூபிக்க முடியும்.

விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்தமை, அமைச்சரின் பதவி விலகலை ஏற்றுக் கொண்டமை மற்றும் கொள்முதல் நடைமுறைகளில் உள்ள முறையான பலவீனங்களை அரசாங்கம் ஒத்துக் கொண்டமை ஆகிய அனைத்தும் சரியான திசையிலான அடியெடுத்து வைப்புக்களாகும் இந்த நடவடிக்கைகள் உறுதிப்பாட்டுடனும் தொடர்ச்சியாகவும் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதே தற்போதைய சவாலாகும்.

விசாரணைகள் பாரபட்சமின்றி நடத்தப்பட்டு, அர்த்தமுள்ள சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தால், தற்போதைய சர்ச்சை ஒரு திருப்புமுனையாக அமையும். அமைச்சரின் பதவி விலகல் ஒரு தனியான் நிகழ்வாகப் பார்க்காமல், ஒரு புதிய நடைமுறையின் தொடக்கமாகப் பார்க்க வேண்டும். இது ஒரு விரிவான பொறுப்புக் கூறல் முறையின் அங்கமாக மாறினால், அது ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கவும் அரசாங்கத்தின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் அது பங்களிப்புச் செய்யும்.

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை - இந்திய துணை ஜனாதிபதி



இலங்கை, இந்திய ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் புதுடில்லியின் நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை. மாகாண சபைகளுக்கான தேர்தல் தாமதப்படுத்தப்படும் நிலையில் தேர்தலை விரைந்து நடத்துவது குறித்து ஜனாதிபதி அநுர குமாரவுடனான சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது. அச்சமயத்தில் தேர்தலை விரைந்து நடத்துவதற்கான சாதகமான சமிக்ஞையை அவர் வெளிப்படுத்தினார் என்று இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களிடத்தில் தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த தந்திருக்கும் இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணனுக்கும் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பு தாஜ் சமுத்திரா விடுதியில் 19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் புளொட் அமைப்பின் தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற தலைவர்கள் சந்திப்பு தொடர்பில் வீரகேசரியிடம் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியானது இந்த நாட்டில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டுமாக இருந்தால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றே அமுலாக்கப்பட வேண்டும் என்பதை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டது. அந்த நிலைப்பாட்டிலேயே கட்சி இன்னமும் உள்ளது. அதற்காக தமிழ் மக்கள் அதிகமான ஆணையை எமது கட்சிக்கே வழங்கி வருகின்றார்கள்.

இதேநேரம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைப் பாராளுமன்றத்தில் 2015இல் ஆற்றிய உரையின்போது, இலங்கைத்தீவின் அமைதிக்கு கூட்டுறவு சமஷ்டி முறைமை பொருத்தமானது என்று கோடிட்டு காண்பித்திருந்தார். ஆகவே அந்த முறைமையை அமுலாக்குவதற்கான இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம் என்று எடுத்துரைத்தேன் என்றார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்ச்சியாக தாமதிக்கப்பட்டு வருகின்றமையை துணை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தேன். குறிப்பாக, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக சட்ட சிக்கல்களை போக்குவதற்கு ஏலவே என்னால் தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அதே பிரேரணையை எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மீண்டும் சமர்ப்பித்துள்ளார். ஆனால் அரசாங்கம் விசேட பாராளுமன்றக் குழுவை நியமித்தும், பெண்களின் பிரதிநிதித்துவத்தை மீளமைப்பது என்ற போர்வையிலும் காலங்கடத்தி வருவதை பார்க்க கூடியதாக உள்ளது என்று சுட்டிக்காட்டினேன். அச்சமயத்தில் ஜனாதிபதி அநுரகுமாரவுடனான சந்திப்பின்போது குறித்த விடயம் சம்பந்தமாக தான் கவனம் செலுத்தியதாகவும் அச்சமயத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைந்து நடத்துவதற்கான சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார் என்றார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறப்பினர் சிறிதரன் தெரிவிக்கையில், போரின் பின்னரான சூழலில் வட மாகாணத்தில் மக்கள் மீள்குடியேற்றத்துக்கான சிரமப்பட்டுக் கொண்டிருந்த தருணத்தில் பாரதப் பிரமருடனான சந்திப்பின்போது வீட்டுத்திட்டக்கோரிக்கையை முன்வைத்திருந்தோம். அச்சமயத்தில் எமது கோரிக்கையை ஏற்று இந்தியா 50ஆயிரம் வீட்டுத்திட்டங்களை வழங்கியது. அந்த வீட்டுத் திட்டங்கள் எமது மக்களுக்கு நன்மைகளை அளித்துள்ளதோடு இன்னமும் இந்திய வீட்டுத் திட்டம் பேசுபொருளாகவே உள்ளது. என்று தெரிவித்தார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# "டைம்" இதழின் உலகின் செல்வாக்கு மிக்க 100 மனிதர்கள் பட்டியலில் கனடியப் பிரதமர்



உலகப் புகழ்பெற்ற 'டைம்' (Time) இதழ் வெளியிட்டுள்ள 2026ஆம் ஆண்டின் உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 மனிதர்களின் பட்டியலில் கனடிய பிரதமர் மார்க் கார்னி கௌரவமிக்க இடத்தைப் பிடித்துள்ளார். ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் கிறிஸ்டின் லகார்ட் இவரைப் பரிந்துரைத்துள்ளதுடன், 'நிதியியல் உலகின் ஜார்ஜ் குளூனி' மற்றும் 'ராக்-ஸ்டார் மத்திய வங்கி ஆளுநர்' எனப் பாராட்டியுள்ளார்.

பல்லாண்டுகளாகப் பின்பற்றப்படும் சர்வதேச ஒத்துழைப்பு முறைமை சிதைவடைவதை முன்கூட்டியே இனங்கண்ட தலைவர் என கார்னியைப் புகழ்ந்துள்ள லகார்ட், பொது நலனுக்காக நாடுகள் இடையிலான ஒத்துழைப்பை அவர் மீண்டும் கட்டியெழுப்புவார் எனத் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பட்டியலில் போப் 14ஆம் லியோ, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உள்ளிட்ட உலகத் தலைவர்களுடன் கார்னியும் இணைந்துள்ளார்.

கடந்த 2025-ஆம் ஆண்டு ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதைத் தொடர்ந்து லிபரல் கட்சியின் தலைமைப் போட்டியில் 85 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று மார்க் கார்னி வெற்றி பெற்றார். தொடக்கத்தில் சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்த அவர் பின்னர் கியூபெக் மற்றும் ஒன்ராறியோ இடைத்தேர்தல் வெற்றிகள் மற்றும் பிற கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தற்போது பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளார்.

# தமிழத் தலைவர்களிடையே ஒற்றுமை மிக அவசியம்! சி.வி.கே.சிவஞானம் - ஸ்ரீதரன் கரங்களைப் பற்றியபடி இந்திய துணை ஜனாதிபதி உருக்கமாக வேண்டுகோள்



தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை மிகவும் அவசியம் என்று இந்திய துணை ஜனாதிபத சி.பி.இராதாகிருஷ்ணன் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் அக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆகியோரின் கரங்களைப் பற்றியவாறு குறிப்பிட்டுள்ளார்.

வட,கிழக்கைப் பிரதிநிதித்துவம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணனுக்கும் இடையிலான சந்திப்பு 19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை தாஜ் சமுத்திரா விடுதியில் நடைபெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தலைவர்கள் தங்களது அறிமுகத்துடன் சமகால நிலைமைகள் மற்றும் இந்தியாவிடத்திலான கோரிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்களை வெளிப்படுத்தினர். அத்துடன் துணை ஜனாதிபதியும் இந்தியாவின் ஒத்துழைப்புக்கள் எதிர்கல ஆதரவுகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொண்டிருந்தார்.

இந்த நிலையில் சந்திப்பு நிறைவடைந்து உத்தியோகபூர்வமான புகைப்படம் எடுக்கப்பதற்கு தயரான போது தலைவர்கள் ஒவ்வொருவராக துணை ஜனாதிபதியின் அருகில் சென்று விடைபெறும் கருத்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்தனர்.

அச்சமயத்தில் சி.வி.கே.சிவஞானம், மற்றும் சிஞானம் சிறிதரன் எம்.பி. ஆகியோர் அருகில் சென்றபோது இருவரது கரங்களையும் சமநேரத்தில் பற்றி இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன் தமிழர்களுக்காக அதிகமான அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. எனினும் தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமையானது மிகவும் அவசியமானது. நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது சிறிதரன் மற்றும் சி.வி.கே. ஆகியோர் புன்னகையுடன் தலையசைத்து ஆமோதித்து நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டுள்ளனர்.

# அமெரிக்கா - ஈரான் போர்:- தற்காலிக போர் நிறுத்தத்தை நீடித்தார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றங்களுக்கு மத்தியில், ஈரான் மீதான ராணுவத் தாக்குதல்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் சில நாட்களுக்கு நீடிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 22 ஏப்ரல் 2026 அறிவித்துள்ளார். ஈரானிய அரசாங்கம் ஒரு ஒருமித்த அமைதித் திட்டத்தை முன் வைக்கும் வரை இந்த கால அவகாசம் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக, 14 நாட்கள் நீடித்த இந்த போர்நிறுத்தம் 22 ஏப்ரல் 2026 புதன்கிழமை முடிவடைந்த நிலையில், கடைசி நேரத்தில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் Shehbaz Sharif மற்றும் ராணுவத் தளபதி Asim Munir ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த முடிவை எடுத்துள்ளதாக தனது 'Truth Social' தளத்தில் டொனால்ட் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். ஈரானியத் தலைமை தற்போது பிளவுபட்டுள்ளதாகவும், அவர்கள் ஒரு தெளிவான முடிவுக்கு வர அவகாசம் தேவைப்படுவதாகவும் பாகிஸ்தான் தரப்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இந்த போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஈரான் மீதான கடல்சார் முற்றுகை (Naval Blockade) தொடர்ந்து நீடிக்கும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் இந்த போர்நிறுத்த நீடிப்பு, ஆசியப் பிராந்தியத்தில் ஒரு தற்காலிக அமைதியைத் தந்தாலும், நிரந்தரத் தீர்வு எட்டப்படுமா என்பது ஈரானின் நகர்விலேயே தங்கியுள்ளது.

# இது தான் புதிய அரசியல் கலாசாரமா?

மின்சார உற்பத்திக்கான நிலக்கரி இறக்குதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் வலு சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக எதிர்க் கட்சிகளால் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 104 வாக்குகள் பெரும்பான்மையினால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

அந்த பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டு அமைச்சர் ஜெயக்கொடி பதவிவிலக வேண்டி வரும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலம் இருப்பதனால் எந்த அமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்படக் கூடிய நம்பிக்கையில்லாப் பிரேரணையும் வெற்றி பெறாது என்பதைக் கூறுவதற்கு எவரும் அரசியல் மேதையாக இருக்க வேண்டியதில்லை.

ஆனால் முன்னைய அரசாங்கங்கள் அவற்றின் அமைச்சர்கள் செய்ததாகக் கூறப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் அன்றைய எதிர்க்கட்சிகளினால் சபையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைகளை அவற்றின் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தித் தோற்கடித்து அவர்களைக் காப்பாற்றியதற்கும் தற்போது அமைச்சர் ஜயக்கொடி விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடந்து கொண்ட முறைக்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதே இங்குள்ள முக்கியமான கேள்வி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிருவாகத்தில் சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக மருந்து வகைகள் கொள்வனவில் முறைகேடுகள் தொடர்பில் அன்று தேசிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டபோது இன்றைய அரசாங்கத்தின் தலைவர்கள் எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தார்கள் என்பதை திரும்பிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஒரு கட்டத்துக்கு அப்பால் ரம்புக்வெலவை சுகாதார அமைச்சராக வைத்திருப்பது உகந்தது அல்ல என்று உணர்ந்த ஜனாதிபதி விக்கிரமசிங்க அவரை வேறு அமைச்சுப் பொறுப்புக்கு மாற்றியதும் அவர் தரங்குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் கைதாகி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பதும் பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள். தரங்குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதன் விளைவாக நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் மின்சார உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க ஒத்துக் கொண்டார். ஆனால் அதே நிலக்கரியைக் கொள்வனவு செய்த நடைமுறைகளில் முறைகேடு எதுவும் இடம்பெறவில்லை என்று கூறி ஜனாதிபதி நிலக்கரி விநியோகஸ்தர்களை முழுக் குற்றத்துக்கும் பொறுப்பாளிகளாக்கி விட்டார்.

ஜனாதிபதி இவற்றைக் கூறிய கையோடு நிலக்கரி கொள்வனவில் பாரதூரமான முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிக்கை அமைச்சர் ஜயக்கொடியை பாதுகாப்பதற்கு அரசாங்கத் தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதங்களின் பொள்ளலை அம்பலப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

தரங்குறைந்த நிலக்கரியின் விளைவாக நுரைச்சோலையில் மின்சார உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியை ஈடுகட்டுவதற்கு மேலதிகமாக தேவைப்படும் டீசல் செலவைச் சமாளிக்க மின்கட்டணங்களில் மீண்டும் கடுமையான அதிகரிப்பைச் செய்ய வேண்டியிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. மக்கள் மீது தொடர்ந்தும் அவர்களால் தாங்க முடியாத சுமைகள் ஏற்றப்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், ஊழல்வாதிகளால் நிரம்பி வழிந்தவை என்று மக்கள் நிராகரித்த முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த அணுகுமுறைகளில் இருந்து வேறுபட்டதாக அமைச்சர் ஜயக்கொடியின் விவகாரத்தில் தேசியமக்கள் சக்தி அரசாங்கத்தினால் ஏன் நடந்துகொள்ள முடியவில்லை? புதிய அரசியல் கலாசாரம், முறைமை மாற்றம் என்று கூறியதெல்லாம் என்னவாயிற்று? முறைமை மாற்றம் இடம் பெற்றதோ இல்லையோ தேசியமக்கள் சக்தி பழைய முறைமைக்கு தன்னை இசைவுபடுத்தக்கூடியதாக தன்னை மற்றியமைத்துக் கொண்டிருப்பதையே இன்று நாம் காண்கிறோம்.

# நாவற்குழி விகாரையின் பிக்கு பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டில் கைதானமைக்கு சுமந்திரன் காரணம் என தென்னிலங்கையில் குற்றச்சாட்டு!

பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டில் கைதான நாவற்குழி விகாரை பிக்கு கைது செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் செயலாளர் முன்னின்று செயற்பட்டுள்ளதாக தென்னிலங்கையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி நாவற்குழி விகாரையில் பிக்கு ஒருவருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை திட்டமிட்ட ஒரு சதியாகும். ஒரு மதத் தலத்திற்குரிய ஆடை ஒழுக்கத்தை மீறி பிரவேசிக்க முயன்ற யுவதிக்கு அறிவுறுத்தியதற்காக, பிக்கு மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சம்பவத்தின் பின்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் செயலாளராகக் கடமையாற்றும் சயந்தன் ஆகியோர் முன்னின்று செயற்பட்டுள்ளனர்.

எவ்வித தவறும் செய்யாத பிக்குவை விகாரையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது. அது வடக்கிலிருந்து பிக்குகளைத் தந்திரோபாயமாக வெளியேற்றும் ஒரு முயற்சியாகும்.

பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதாகக் கூறும் அநுரகுமாரவும் அரசாங்கமும், இவ்விடயத்தில் மௌனம் காப்பது ஏன். ஒரு மதத்தின் எழுச்சியும் விழிப்புணர்வும் அந்த மதம் சார்ந்த மக்கள் குறைவாக வாழும் பகுதிகளிலேயே ஏற்படுத்தப்பட வேண்டும். பிக்குகளை வடக்கிலிருந்து வெளியேற்றி, அங்கு



தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை உறுதிப்படுத்த இந்த அரசாங்கம் முற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

நாவற்குழி விகாரையில் அநியாயமாகப் பாதிக்கப்பட்ட பிக்கு, மீண்டும் அந்த விகாரையிலேயே தங்கித் தனது மதப் பணிகளைத் தொடர்வதற்கான சட்டப் பூர்வமான பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இதற்காகப் புத்த சாசன அமைச்சருக்கு இரண்டு வார கால அவகாசத்தை வழங்குகிறோம். அந்த காலப்பகுதிக்குள் பிக்குவுக்கு நீதி வழங்கப்பட்டு, அவர் மீண்டும் நாவற்குழி விகாரைக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படாவிட்டால், மகா சங்கத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து பௌத்த சாசன அமைச்சுக்கு முன்னால் பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான விசாரணைகள் மற்றும் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட விதம் குறித்து கலகொட அத்தே ஞானசார தேரர் அரசியல் இலாபங்களுக்காகக் கூறப்பட்ட இத்தகைய கருத்துக்கள், உண்மைக்கு அப்பாற்பட்டவை என்பது இப்போது நீதிமன்ற அறிக்கைகள் ஊடாகப் புலனாகத் தொடங்கியுள்ளதாக ஞானசார தேரர் விவரித்துள்ளார்.

## பிள்ளையான் மீண்டும் சிறைச்சாலையில்

சிறைச்சாலைகள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த, பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன், மீண்டும் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அதற்கமைய, வெலிசர கடற்படை தளத்திலுள்ள சிறைக்கூடத்துக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக, சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்துள்ளார். இந்த நிலையில், கைதி ஒருவருக்கு வழங்க வேண்டிய அனைத்து வசதிகளும், பிள்ளையானுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஏதேனும் விசேட தேவைகள் ஏற்படும் பட்சத்தில் அதனை உரிய முறையில் சிறைச்சாலைகள் அத்தியட்சகருக்கு அறிவிக்க வேண்டும்

கிடைக்கும் கோரிக்கைகளை சட்ட ரீதியாக அணுகி இயலுமான விடயங்கள் செய்து கொடுக்கப்படும் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ரவிந்திரநாத் சுப்ரமணியம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் பிள்ளையான் கைது செய்யப்பட்டு



தடுப்புக் காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அதனைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# நில அடையாளத்தைப் பாதுகாப்பதே சுயநிர்ணய உரிமையின் மூல வேர்!

கட்டுரையாளர்:- பனங்காட்டான்

ஒரு வார சமாதான பாதயாத்திரைக்கான காலம் இந்த வார செவ்வாய்க்கிழமை முதல் அடுத்த வார செவ்வாய்க்கிழமை வரை இலங்கையில் இடம் பெறவுள்ளது. அநுர குமர அரசாங்கத்தின் தூய்மையான இலங்கை முன் முயற்சி மற்றும் அரசாங்க சார்பு நிறுவனங்களின் ஆதரவுடன் இது ஏற்பாடாகியுள்ளது.

இனங்களுக்கிடையில் ஆன்மிக மற்றும் கலாசார நடவடிக்கைகளின் மூலம் நாட்டில் அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவது இதன் நோக்கமென அறிவிக்கப்பட்டுள்ளது. மதங்களுக்கிடையே உரையாடலை ஊக்குவிப்பது இதன் முக்கிய இலக்குகளில் ஒன்று எனவும் முன்மொழியப்பட்டுள்ளது.

பண்ணக்ககர தேரர் தலைமையிலான பன்னிரண்டு பிக்குகள் அடங்கிய குழு இந்தப் பாதயாத்திரையை அநுராதபுரம் தம்புள்ள கண்டி கொழும்பு உள்ளிட்ட பல புனித இடங்களை கடந்து செல்லக்கூடியதாக ஏற்பாடாகியுள்ளது. (இதில் வடக்கு கிழக்கு பகுதிகள் காணப்படவில்லை). பௌத்த பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்துவது இந்தப் பாதயாத்திரையின் முக்கியமான குறிக்கோள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒரு வார பாத யாத்திரைக்கு சமாதான யாத்திரை என்று பெயர். இதற்காக பௌத்த பிக்குகள் பங்குபற்றும் குழு ஒன்று பெயரிடப்பட்டுள்ளது. இவர்கள் யாத்த்திரை செய்யும் இடங்களில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் இடங்கள் பெயரிடப்படவில்லை. பௌத்த பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்துவதற்கே இந்த ஒரு வாரத்தில் முக்கியத்துவம்.

இவைகளின் ஊடாக என்ன அறியப்படுகிறது? இலங்கை ஒரு பௌத்த நாடு. அவர்களின் பௌத்தம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். இதற்கான பாதயாத்திரைக் குழுவுக்கு தெரிவானவர்கள் பௌத்த பிக்குகள் மட்டுமே. ஆனால் இதற்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் சமாதான யாத்திரை வாரம். அதாவது அரசியல் நோக்கத்தோடு அவ்வப்போது பிளவுபட்டிருக்கும் பௌத்தர்களை ஒன்றிணைத்து சமாதானப்படுத்துவதற்கான ஒரு வாரமாக இது ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்து மக்களையும் சமமாக மதித்து அனைத்து மதங்களையும் வேறுபாடின்றி மேம்படுத்துவதே அரசாங்கத்தின் அடிப்படைக் குறிக்கோள் என்று கூறிக் கொள்ளும் தேசிய மக்கள் சக்தி அரசு சமாதான பாத யாத்திரை வாரம் என்ற பெயரில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதை இங்கு அவதானிக்க முடிகிறது.

சிங்கள தேச அரசாங்கம் சமாதான பாத யாத்திரை வாரத்தை ஒரு தேசிய நிகழ்வாக மேற்கொள்ளும் வேளையில் தமிழர் பிரதேசங்களில் சிறுபான்மை இனம் ஒன்றின் மத வழிபாட்டுக்கு குந்தகமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதை இங்கு குறிப்பிட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் காங்கேசன் துறையில் தையிட்டி என்ற தமிழ்க் கிராமத்தில் தனியார் காணிகளில் நிறுவப்பட்டுள்ள பௌத்த விகாரையையும் வவனியா மாவட்டத்தில் வெடுக்குநாறிமலை என்ற தமிழரின் தொன்மையான வழிபாட்டுத்தல இடத்தையும் பௌத்தமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இராணுவத்தினரின் தேவைக்காக பயன்படுத்தப்பட்ட தமிழரின் காணிகளில் தையிட்டி விகாரை நிறுவப்பட்டுள்ளது.

வெடுக்குநாறிமலையை தொல்பொருள் திணைக்களம் ஊடாக கையகப்படுத்தும் முயற்சிகளுக்கு ஆட்சி பீடம் சட்டபூர்வ அங்கீகாரத்தை வழங்கி வருகிறது.

தையிட்டி விகாரை அங்கிருந்து அகற்றப்படும் அந்தக் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்றெல்லாம் ஆட்சித் தரப்பினரால் அவ்வப்போது கூறப்பட்டது. நயினாதீவு மற்றும் ஆரியகுளம் நாகவிகாரைகளின் பீடாதிபதிகள் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு சாதகமான கருத்துகளை தெரிவித்து வந்தனர். எனினும் அநுர குமர அரசின் அமைச்சர்கள் எம்.பிக்களுக்கிடையில் இது தொடர்பான ஒருமைப்பாடு இல்லை. . அதே போன்று தையிட்டி போராட்டத்தை முன்னெடுத்து வரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு மற்றைய தமிழ் தேசிய கட்சிகளின் ஆதரவு இல்லை. இதனால் காணிச் சொந்தக்காரர்களினதும் பொது மக்களினதும் ஆதரவோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தை தொடர்ந்து வருகிறது. தமிழரசுக் கட்சி எம்.பியான சிவஞானம் சிறீதரன் இப்போராட்டத்தில் பங்குபற்றி வருகின்றாராயினும் அதனை தமிழரசுக் கட்சியின் ஆதரவு என கூறமுடியாது.

தையிட்டி விகாரையின் காணிச் சொந்தக்காரர்கள் 17 பேர் அதற்கான உறுதிகளோடு இருந்தாலும் அவர்களால் கூட தங்களின் காணிகளை அடையாளம் காணமுடியாதுள்ளது. தையிட்டி விகாரைப் பகுதி காணிகளை அளவீடு செய்ய சம்மதித்தால் அக்காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் அவர்களிடம் இருப்பதால் அதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. மறுபுறத்தில் விகாரை அமைந்துள்ள காணிக்குள் எவரையும் அனுமதிக்கப் போவதில்லையென அதன் தலைமைப் பிக்கு சவால் விட்டுள்ளார். இதனால் விகாரை அகற்றும் போராட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அடுத்து குறிப்பிட வேண்டியது வெடுக்குநாறிமலை மீதான சர்ச்சை. வவுனியா மாவட்டத்தில் ஒலுமடுவவுக்கு அருகாமையிலுள்ள பாலமொட்டை மற்றும் நைனாமடு வனப் பகுதியில் அமைந்துள்ள இந்த இடத்தில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயம் சுமார் மூவாயிரம் ஆண்டுகளாக பக்தர்களால் பூசிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. இலங்கை தொல்பொருள் திணைக்களம் திடுதிப்பென இந்த இடத்தில் மையல் கொண்டு இதனை தொல்பொருள் பிரதேசம் என பிரகடனப்படுத்தி சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இந்த இடத்தை வட்டமன பப்பத்தைய விகாரைப் பகுதி எனவும் தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது. பௌத்த மதக் கூற்றுகளுக்கு ஆதரவாக தொல்பொருள் திணைக்களம் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நீதிமன்ற தீர்ப்பு இங்கு தமிழர்களின் வழிபாட்டை அனுமதித்த போதிலும் பக்தர்கள் அங்கு கூடுவதை பொலிசார் கட்டுப்படுத்தி வந்துள்ளனர். அத்துடன் பௌத்த துறவிகளின் இப்பகுதிக்கான வருகை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இது பௌத்த மேலாதிக்கத்தை இங்கு உறுதிப்படுத்த தொல்பொருள் திணைக்களம் ஆதரவளிப்பதாக காணப்பட்டது.

பல்வேறு இந்துமத அமைப்புகளும் நிறுவனங்களும் இது தொடர்பான கண்டனங்களை மேற்கொண்ட போதிலும் அவர்களின் ஆன்மிக கலாசார பாரம்பரியம் இங்கு ஓரங்கட்டப்பட்டே வந்துள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளை அங்கீகரிப்பவையாக தொடர்ந்து வந்துள்ளன. அநுர குமர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் தொல்பொருள் திணைக்களத்தின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதே காணப்படுகிறது.

தொல்பொருள் திணைக்களம் மகாவலி அதிகாரசபை மற்றும் வனபாதுகாப்பு திணைக்களம் போன்றவற்றின் செயற்பாடுகள் இங்கு வாழும் சமூகங்களுக்கிடையே இன மன மோதலை உருவாக்கி வருகின்றன. இத்தகைய தலையீடுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பூராவும் வெவ்வேறு வடிவத்தில் மேற்கொள்ளப்பட்டு தமிழ் மக்களிடையே பெரும் கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வந்துள்ளது. இங்குள்ள நிலங்களை இராணுவத் தேவைக்காக பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் தலைவர் சசிகுமார் முன்னாள் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் மீண்டும் அரச பயங்கரவாத தடுப்பு பிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அதற்கு முன்னைய ஆண்டு மகாசிவராத்திரியின் போது இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதும் கவனிக்கப்பட வேண்டியது.

வெடுக்குநாறிமலை என்ற பெயரே தனித் தமிழ் அர்த்தத்தை கொண்டது. கலப்படமற்ற தமிழ்ப்பதம் இது. இங்கு சர்ச்சைக்குரிய தொல்பொருள் தளங்களின் சான்றுகள் காணப்படுவதாக தொல்பொருள் திணைக்களம் கூறினாலும் அதனை நிரூபிக்கக்கூடிய எந்த வாய்ப்பும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால்இ தொல்பொருளியல் பாதுகாப்பு ஒழுங்குகளின் நடைமுறைகள் வெடுக்குநாறிமலைக்கும் அங்குள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கும் அதன் வழிபாட்டுக்குரிய சமூகத்துக்கும் குறைகளை ஏற்படுத்தி வருகிறது.

பௌத்த மதகுருமார்கள் சிறுபான்மை மத சமூகங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குள் புகுந்து அவற்றை புனித பிரதேசங்கள் எனவும் பௌத்த ஸ்தலங்களை மீட்டெடுத்து வருவதாகவும் விளம்பரப்படுத்தும் தன்மை தமிழர் பிரதேசங்களில் அதிகரித்து வருகிறது. இங்குள்ள பல மாவட்டங்களில் புதிதாக ஆவணப்படுத்தப்படும் இத்தகைய வடிவம் அரசாங்க ஆதரவுடன் இனங்களுக்கிடையில் பிளவுகளை உருவாக்கி காலக்கிரமத்தில் மோதல்களை உருவாக்கி விடுமென அச்சமடைய வைக்கிறது.

ஒரு புறத்தே சமாதான பாத யாத்திரையை உருவாக்கி ஊக்குவிக்கும் அநுர அரசுஇ முன்னைய சிங்கள அரசுகள் எதற்கும் குறையாத வகையில் இன-மத மோதல்களுக்கு வழியமைத்து வலுவுட்டி வருகிறது.

பாடுவது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் என்று தமிழில் அர்த்தமுள்ள மொழியாடல் ஒன்றுள்ளது. சமாதான வார கொள்கையும் அந்தப் பிரகடனம் தொடர்பான பாதயாத்திரையின் குறிக்கோளும் நடைமுறையில் பௌத்தத்தை மேன்மைப்படுத்தி மற்றைய மதங்களை கீழ்மைப்படுத்துவதாகவே அமைவதை காணமுடிகிறது. இதற்கு உடந்தையாக தொல்பொருள் திணைக்களத்துக்கு முழு உரிமையும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் மூலம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் கதிரைகளை நம்பி அரசியல் வியாபாரம் செய்யும் தமிழ் தேசிய அரசியல்வாதிகள் தங்களுக்குள்ள பொறுப்பை மறந்துவிடக் கூடாது. நில அடையாளத்தை பாதுகாப்பதே சுயநிர்ணய உரிமையின் மூலவேர் என்பதை மறந்தால் மிஞ்சப் போவது எதுவுமாக இருக்காது. ஆண்டாண்டு தோறும் ஒரு சமாதான யாத்திரை வந்து போகும். தமிழ் நிலம் கொஞ்சம் கொஞ்சமாக அபகரிக்கப் பட்டு செல்லும்.



# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


18 ஏப்ரல் 2026 முதல் 24 ஏப்ரல் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகரெத்தினம் முருகேசு

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 25 ஏப்ரல் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாள் 17 ஏப்ரல் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நமசிவாயம் திருநாவுக்கரசு

புங்குடுதீவு இறுப்பிட்டி 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் தனபாலசிங்கம் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு நாள்23 ஏப்ரல் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நமசிவாயம் திருநாவுக்கரசு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2ம் மாத நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 2ம்மாத நினைவு நாள் 18 ஏப்ரல் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 27வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 27வது ஆண்டு நினைவு நாள் 19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவரகளை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 19 ஏப்ரல் 2026 ஞாயிற்றக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




09 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




10 ஏப்ரல் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




11 ஏப்ரல் 2026 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மாங்கொல்லை காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




17 ஏப்ரல் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




18 ஏப்ரல் 2026 சனிக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 2வது மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்.புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது 27வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன் பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




20 ஏப்ரல் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு பகீரதன் ஹரீகரன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




23 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் திருநாவுக்கரசு அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



# ஈழத்தமிழர் அரசியல் என்பது தோல்விக்கான காத்திருத்தலா?




கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



கடந்த வாரம் எழுதிய கட்டுரை தொடர்பில் சில எதிர்வினைகளை பார்க்க முடிந்தது. ஈழத் தமிழர் அரசியல் ரீதியில் ஒரு படித்த சமூகமா என்று கேட்டவுடன், சிலரால் அதனை பொறுத்துக் கொள்ள முடிய வில்லை போலும்.

சிலர் முகநூல்களில் உணர்ச்சிவசப்பட்டிருந்தனர். ஒரு சிலர் இவ்வாறு எதிர்வினையாற்றிருக்கின்றனர். அதாவது, சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை நாடாளுமன்ற பெரும்பான்மையின் ஊடாக மட்டும் தான், அடையலாம் என்பது தவறானது அனைத்துலக நடுவர் மன்றம் என்பதைப் பற்றித் தெரியுமா என்று ஒருவர் கேட்டிருந்தார். பெரும்பான்மையின மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் சமூகத்தின் இணக்கப்பாடு இன்றி அனைத்துலக வழிமுறையின் ஊடாக சமஸ்டித் தீர்வை அடையலாம் என்பது தான் சிலருடைய வாதமாக இருக்கின்றது.

முதலில் அனைத்து உலகம் என்று ஒன்று இருக்கின்றதா என்னும் கேள்விக்கே உலகில் பதிலில்லை. இதே போன்று இன்னும் சிலரோ, வேறுவிதமாக ஆவேசப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. குறிப்பிடத்தக்க பொருத்தமான பங்களிப்புக்கள் இல்லாமல் பிறரின் பணியை விமர்சிக்கும் அணுகுமுறை எந்த விதத்திலும் போராட்டத்தை வலுப்படுத்தாது. மற்றவர்களின் செயல் திறனை கேள்விக்குள்ளாக்கும் முன் தங்களுடைய செயற்பாடுகள் என்ன, அவை எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பதை வெளிப்படையாக விளக்குவது அவசியம் என்று அவர்களின் பாராயணம் நீண்டு செல்கின்றது.

சிந்தனை ரீதியான தலைமைத்துவம் என்று ஒரு விடயமுண்டு. இதனைத் தான் இந்தக் கட்டுரையாளர் பிரதிநிதித்துவம் செய்கின்றார். சிந்தனைத் தலைவர்கள் என்னும் விடயம் அதிகம் ஆங்கிலச் சூழலில் தான் விவாதிக்கப்படுவதுமுண்டு. தமிழ்ச் சூழலை பொறுத்த வரையில் இந்த விடயம் பெரிதாக நோக்கப்படுவதில்லை ஏனெனில், அரசியல் கட்சி களில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களை அரசியல் சிந்தனையாளர்கள் என்றே எண்ணிக் கொள்கின்றனர். இப்போது, புலம் பெயர் அமைப்புக்களைச் சேர்ந்த சிலரும் இதில் இணைந்து விட்டனர். இந்தப் பின்னணியில் தான் இந்தக் கட்டுரையாளரை நோக்கி கற்கள் வீசப்படுகின்றன. மாற்றுக் கருத்துக்கள் இருக்க வேண்டியதும் அதன் அடிப்படையில் அரசியல் விவாதங்கள் இடம்பெற வேண்டியதும் அவசியம். அப்போது தான் அரசியல் தொடர்பில் இளைய தலைமுறையினர் மத்தியில் உரையாடல்கள் அதிகரிக்கும். அவர்கள், சரி தவறுகளை முன்வைத்து தங்களுக்குள் விவாதிப்பர். அவ்வாறு இடம் பெற்றால் தான் அரசியலில் கற்பனை கடந்த மாற்றங்கள் ஏற்படும்.

எங்களைப் போன்றவர்களை நோக்கி நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை முதலில் கூறி விட்டு மற்றவர்களை நோக்கி குற்றச் சாட்டுங்களை முன் வையுங்கள் என்று ஆவேசப்பட்டால், நாங்கள் என்ன செய்ய முடியும்? அரசியல் விடயங்களை ஆய்வுக் கண்ணோட்டத்தோடு நோக்குபவர்களால் ஆய்வுகளைத் தான் எங்களுடைய பதில்களாக முன் வைக்க முடியும்.

அரசியல் வெறும் கற்பனையுடன் புனர்ந்திருக்கும் சூழலில், அதன் மீது ஓங்கி அடிப்பதும் யதார்த்தம் என்ன என்பதை உணர்த்துவதும் தான் எங்களுடைய பணி. அதனைத் தான் செய்து கொண்டிருக்கின்றோம். எனவே கருத்துருவாக்கிகளை நோக்கி நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்க முற்படுவதே முதலில் ஒரு அறியாமை.

அரசியல் கட்சிகளை நோக்கி அவ்வாறு கேட்கலாம் ஏனெனில் செயற்படுவதற்காகத் தான் மக்கள் அவர்களை தெரிவு செய்திருக்கின்றனர். அதிலும் குறிப்பாக புலம்பெயர் சூழலில் இருந்து இவ்வாறான கேள்விகளை முன் வைக்க முயற்சிக்கும் போது கடந்த பதினாறு வருட காலமாக எவ்வாறான ஆக்கபூர்வமான அரசியல் தலையீடுகள் புலம்பெயர் சூழலிலிருந்து, மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றின் விளைவுகள் என்ன என்னும் கேள்விகளுக்கு பதில் தேட வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு. முதலில் புலம் பெயர் சூழலில் பல்வேறு பெயர்களுடன் இயங்கி வருவோர் தங்களுடைய செயற்பாடுகளை சுயவிமர்சனம் செய்ய முயற்சிக்க வேண்டும். யுத்தத்திற்கு பின்னரான சூழலில் எவ்வாறான விடயங்கள் உரையாடப்பட்டன? அவற்றின் சாதகமான விளைவுகள் என்ன? பதில் எவரிடமாவது இருக்கின்றதா? ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக அழுத்தங்களை அதிகரிப்பதன் மூலம், இலங்கை அரசாங்கங்களை இறங்கி வரச் செய்யும் முயற்சிகளுக்கு என்ன நடந்தது?

தோல்வி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்வதன் ஊடாக நீதியை நிலைநாட்டும் முயற்சிக்கு என்ன நடந்தது? தோல்வி. கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில், அங்குள்ள அரசியல் உயரடுக்கினரை கையாளுவதன் ஊடாக இலங்கையின் மீது சர்வதேச நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என்னும் வாதங்களுக்கு என்ன நடந்தது? தோல்வி. இவை அனைத்திலும் ஏன் தோல்வி ஏற்பட்டது? இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்?

பதிலைத் தேடும் துனிவு இல்லை ஆனால் மீண்டும் தோல்வி அடைவதற்கான ஆசை மட்டும் குறைய வில்லை. இப்போது மீண்டும், சர்வ தேச நடுவர் மன்றம் என்னும் ஒரு புதிய கதை. யார் அந்த சர்வதேசம்? இலங்கை அரசாங்கத்தின் இணக்கம் இன்றி எவ்வாறு, இலங்கைக்குள் சமஸ்டியை ஏற்படுத்துவது? அதற்கான உதாரணங்கள் இருக்கின்றனவா? ஒரு நாட்டை உடைப்பது புரட்சியின் மூலம் சாத்தியப்படலாம் ஆனால் ஒரு நாட்டுக்குள் தீர்வு என்றால் அதற்கு அந்த நாட்டுக்குள் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். பலாத்காரத்தால் சமஸ்டியை ஏற்படுத்த முடியாது. இந்தச் சிறிய உண்மையை புரிந்து கொள்வதற்கு ஏன் இந்தளவு சிரமம்? இவ்வாறான அரசியல் கதைகளை கூறுவோர் தொடர்பில் உண்மையில் கோபப்படத்தான் வேண்டும் ஆனால் அதற்கு பதிலாக பரிதாபமே ஏற்படுகின்றது. எனெனில் இவர்கள் தாங்கள் முட்டாள்களாக இருப்பதால் அல்லது தாங்கள் வெகுசன விரோதிகளாக இருப்பதால் மற்றவர்களும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். இவர்கள் மீது எவ்வாறு கோபப்பட முடியும்!

இந்த இடத்திலும் ஒரு மேற்குலக ராஜதந்திரி குறிப்பிட்ட விடயம் தான் நினைவுக்கு வருகின்றது. இது சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இன்று ஒப்பீட்டிப்படையில் கனடாவில் தான் அதிகமான புலம்பெயர் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அண்ணளவாக மூன்று லட்சத்திற்கும் அதிகம் என்று சொல்லப்படுகின்றது. ஒரு தமிழர் அமைச்சராகவும் இருக்கின்றார். இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் பலர் அரசியலில் இருக்கின்றனர்.

இந்த அடிப்படையில் புலம்பெயர் தமிழ் செயற்பாடுகள் தொடர்பில் உங்களுடைய அபிப்பிராயம் என்ன என்று நான் கேட்டபோது, அவர் நேரடியாக பதிலளிக்கவில்லை. எனக்கு ஒரு அண்ணன் இருக்கின்றார். அவர் தொழில் ரீதியில் ஒரு உயர் பதவியில் இருக்கின்றார். அவர் மிகவும் ஆடம்பரமான இல்லத்தில் வாழ்கின்றார். நாங்கள் ஓய்வு நேரங்களில் சந்தித்துக் கொள்வோம்.

அப்படியான சந்தர்பங்களில், அவர் ஒரு மதுக் குவளையுடன், கம்யூனிசம் பற்றிப் பேசுவார். மார்க்ஸ், லெனின் பற்றி பேசுவதில் மகிழ்ச்சியடைவார். இதனைக் கூறி விட்டு என்னை நோக்கினார். முதலில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை

பின்னர் தான் விளங்கியது இப்படித் தான் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு இலங்கையின் அரசியல் பற்றிப் பேசுபவர்களுடைய நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும் என்பது தான் அவருடைய பதில். கண்ணதாசனின் ஒரு பாடல் வரியுண்டு. இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சவுக்கியமே - அப்படித்தான் வசதியான இடங்களில் இருந்து கொண்டு, அடுத்தவருக்கு அறிவுரைகள் கூறுவது மிகவும் இலகுவானது தான்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கு முரண்பாடுண்டு? எவருக்குமில்லை. அந்த அடிப்படையில் தானே, அனைத்து அரசியல் கட்சிகளும், ஆயுத இயக்கங்களும் செயற்பட்டிருந்தன. அதற்காகத் தானே எத்தனையோ தியாகங்கள் புரியப்பட்டன. பலர் தங்களின் உயிர்களையும் தியாகம் செய்திருந்தனர். ஆனால் அரசியல் ரீதியில் எதனையும் அடைய முடிய வில்லை என்பது தானே நமது பிரச்சினை. அனைத்து நகர்வுகளும் தோல்வியில் தானே முடிவுற்றிருக்கின்றது.


இந்த நிலையில் தான் அரசியலை கடந்த கால அனுபவங்களிலிருந்து புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற்பட வேண்டியது கட்டாயமாகின்றது. நமது கடந்த காலம் என்ன சொல்கின்றது? ஒரு சமூகம் எத்தகைய தியாகங்களை புரிகின்றது. அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. கொள்கையில் உறுதியாக இருக்கின்றது என்பதெல்லாம் அதன் வெற்றியை தீர்மானித்துவிடுவதில்லை. இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் எழுச்சியும், அதன் வீழ்சியுமே மிகச் சிறந்த உதாரணமாகும்.

தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் வெற்றியை தந்து விடும் என்றால் விடுதலைப்புலிகள் வெற்றி பெற்றிருக்க வேண்டுமல்லவா! எனவே இங்கு விடயம் வேறு. குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையை புரிந்து கொண்டு, அதற்கேற்ப தூர நோக்கோடு செயற்படுவதன் மூலம் மட்டும் தான் வெற்றியை பெற முடியும். வரலாற்றில் வெற்றி பெற்றவர்கள் என்னும் பட்டியலில் இருக்கும்

(18ம் பக்கம் பார்க்க)

# பதுங்கிக் கொண்டது ஏன்?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கடந்த 11 ஆம் திகதி ‘எக்ஸ்’ தளத்தில் ஒரு படத்தைப் பதிவிட்டு, இலங்கைக்கு என்னவானது வெளிவிவகார அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் கூட எங்கே’ என கேள்வி எழுப்பியிருந்தார். இந்த முக்கியமான கூட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஏன் பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லை?

தயவுசெய்து முன்னொருமுறை சொன்னது போல செலவுக் குறைப்பு என்றோ அல்லது நிலக்கரி ஊழல் தொடர்பான நம்பிக்கையில்லா பிரேரணையில் அவர்கள் வாக்களிக்க வேண்டியிருந்தது என்றோ சொல்லாதீர்கள்.





பதவியில் இருக்கும் நீங்கள் இந்தக் கூட்டங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால், இந்தியப் பெருங்கடலில் எமது இயற்கை அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு நழுவி விடும்” என்றும் அந்தப் பதிவில் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டிருந்தார். இது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஏனென்றால் கடந்த 10ஆம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை மொரீஷியஸில் நடந்த ‘இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் இலங்கையின் சார்பில் முக்கியமான தலைவர்கள் யாரும் பங்கேற்றிருக்கவில்லை, உயர் அதிகாரிகள் மட்டத்தில் இருந்து கூட யாரும் சென்றிருக்கவில்லை. இது பாரதூரமான ஒரு விடயமாக அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், சர்வதேச உரையாடல் அரங்கை தவறவிட்ட இரண்டாவது முக்கிய சந்தர்ப்பமாக இதனை குறிப்பிடலாம்.

2024ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடந்த பிரிக்ஸ் மாநாட்டிற்குஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும், அவர் பங்கேற்காதது முக்கியமான ஒரு இராஜதந்திரத் தவறாக இப்போதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

அது போல மொரீஷியஸ் தலைநகர் போர்ட் லூயிஸில் நடந்த 9 ஆவது இந்திய பெருங்கடல் மாநாட்டிற்கு, அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், வெளிவிவகார அமைச்சரோ அல்லது பிரதிவெளிவிவகார அமைச்சரோ, உயர் மட்ட அதிகாரிகளோ பங்கேற்றிருக்கவில்லை.

ஏன் பங்கேற்கவில்லை என்ற, ஹர்ஷ டி சில்வாவின் கேள்விக்கு வெளிவிவகார அமைச்சு இன்னமும் விளக்கம் அளிக்கவில்லை. அரசாங்கம் இதற்கு பதிலளிக்குமா இல்லையா என்று தெரியவில்லை.

ஆனால் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரங்கு. இந்த மாநாடு 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வருகிறது. இது ஓர் அமைப்பு அல்ல. ஆனால், இந்தியா பெருங்கடல் விளிம்பு நாடுகள் பங்கேற்கின்ற ஒரு மாநாடாக இடம்பெற்று வருகிறது.

சிங்கப்பூரில் நடந்த முதல் மாநாட்டில், பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். 2017ஆம் ஆண்டு இரண்டாவது மாநாடு கொழும்பில் இடம்பெற்ற போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தனர்.

2018ஆம் ஆண்டு வியட்நாமின் ஹனோயில் இடம்பெற்ற 3 ஆவது மாநாட்டில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார்.

2019 ஆம் ஆண்டு நடந்த நான்காவது இந்திய பெருங்கடல் மாநாட்டிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கி ஆரம்ப உரை நிகழ்த்தி இருந்தார்.

5ஆவது மாநாடு 2021 ஆம் ஆண்டு அபுதாபியில் இடம் பெற்ற போது, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரீஸ் தலைமையிலான குழு பங்கேற்றது.

2023 ஆம் ஆண்டு 6 ஆவது இந்திய பெருங்கடல் மாநாடு பங்களாதேஷின் டாக்கா நகரில் இடம் பெற்ற போது, இலங்கையை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பிரதிநிதித்துவம் செய்திருந்தார்.

7ஆவது இந்திய பெருங்கடல் மாநாடு, 2024 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவின் பெர்த் நகரில் இடம்பெற்ற போது, ஜனாதிபதியாகஇருந்த ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு உரையாற்றினார்.

2025 ஆம் ஆண்டு எட்டாவது இந்திய பெருங்கடல் மாநாடு ஓமான் தலைநகர் மஸ்கட்டில் இடம்பெற்ற தருணத்தில், தற்போதைய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் கலந்து கொண்டிருந்தார்.

ஆனால், இம்முறை நடந்த 9வது இந்திய பெருங்கடல் மாநாட்டில் இலங்கையின் சார்பில் யாருமே பங்கெடுக்கவில்லை. இந்திய பெருங்கடல் விளிம்பு நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடு என்ற வகையிலும், இந்திய பெருங்கடல் மாநாட்டின் நிறுவுநர் நாடு என்ற வகையிலும் இலங்கைக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

ஆனால் எவரும் பங்கேற்காதது ஏன் என்ற கேள்விக்கு இன்னமும் பதில் இல்லை. இந்த மாநாட்டில் மொரீஷியஸ் பிரதமர், இந்தியா, மொரீஷியஸ், பூட்டான், நேபாளம், பங்களாதேஷ், தன்சானியா, சீஷெல்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் உள்ளிட்ட 30 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்தியப் பெருங்கடலின் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கருதப்படுகின்ற இலங்கைத் தீவு இந்த மாநாட்டைத் தவிர்த்துக் கொண்டது ஆச்சரியமான விடயம். அதுவும் ஈரானுக்கு எதிரான போர் தொடங்கிய பின்னர், அதன் தாக்கம் இந்திய பெருங்கடலுக்கும் விரிவுபடுத்தப்பட்ட சூழலில், இதனால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடான இலங்கை, இந்த மாநாட்டை தவிர்த்துக் கொண்டது விவேகமற்ற செயல்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பரபரப்பான அரசியல் சூழலில், இலங்கை அரசாங்கம் இந்த வாய்ப்பை தவறவிட்டதன் மூலம், கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகரித்துள்ள சூழலில், சுதந்திரமான போக்குவரத்துக்கு சவால்கள் எழுந்துள்ள சூழலில் இத்தகைய பிராந்திய பாதுகாப்பு அரங்குகள் இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை.

இப்பொழுது அயல் நாடுகளுடனும் இந்திய பெருங்கடல் கப்பல் போக்குவரத்து பாதையில் உள்ள நாடுகளுடனும் தொடர்புகளையும், இணைப்புகளையும் வலுப்படுத்துவது, இலங்கைக்கு அவசியமான தேவையாக உள்ளது. இந்தச் சூழலில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏன் இந்த மாநாட்டின் அவசியத்தை குறைத்து மதிப்பீடு செய்தது என்பது கேள்விக்குறியாக உள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மாநாடு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், உயர் மட்டத் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்று வந்துள்ளனர். பெரும்பாலும் ஜனாதிபதி அல்லது பிரதமர் பங்கேற்ற சூழலே காணப்பட்டது.

ஆனால், இம்முறை அதிகாரிகள் மட்டக்குழுவை கூட அரசாங்கம் அனுப்பாமல் தவிர்க்கின்றமைக்கு சர்வதேச அழுத்தங்கள் காரணமா என்ற கேள்வியும் உள்ளது.

சர்வதேச கப்பல் பாதையில் ஏற்பட்ட அச்சுறுத்தல் நிலைமை இலங்கைக்கு அருகே ஈரானிய கப்பல் தாக்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் இலங்கை கருத்து தெரிவிக்கவில்லை. அத்தகைய அச்சுறுத்தல்கள் சவால்களை கண்டித்து எந்த கருத்தையும் முன் வைத்திருக்கவில்லை.

இது இலங்கையின் அணிசேரா கொள்கை மற்றும் நடுநிலைமை குறித்து கேள்விகளை எழுப்ப வைத்திருக்கிறது.

இந்த சூழலில் இந்திய பெருங்கடல் மாநாட்டை இலங்கை தவிர்த்துக் கொண்டதன் மூலம் சர்வதேச அரங்கு ஒன்றில் தன் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதில் இருந்து தப்பிக்க முனைந்ததா என்ற சந்தேகங்களும் எழுந்திருக்கின்றன.

எது எவ்வாறாயினும் நிலவுக்கு அஞ்சி பிறதேசம் போக முடியாது. இந்திய பெருங்கடலின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக இலங்கை தீவு இருக்கிறது

புவிசார் அரசியலில் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவைப் புறக்கணித்து, ஒரு பாதுகாப்பு கொள்கையை அமெரிக்கா போன்ற வல்லரசுகளால் எப்படி வகுத்துக் கொள்ள முடியாதோ, அது போலவே இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு மற்றும் கடல்சார் கொள்கை வகுப்புகளில் இருந்து இலங்கையினாலும் ஓடி ஒளிந்து கொள்ள முடியாது.

அவ்வாறு ஓடி ஒளிந்து கொள்ள முனைந்தால், சீப்பை ஒளித்து வைத்து கல்யாணத்தை நிறுத்த முயன்றது போல் ஆகிவிடும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அப்படி ஒரு முயற்சியைத் தான் மேற்கொண்டு இருக்கிறது. ஆனால் இந்த விவகாரத்தில் அரசாங்கத்தின் மெத்தனப் போக்கு கடுமையான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.

# ஈழத்தமிழர் அரசியல் என்பது தோல்விக்கான காத்திருத்தலா?

(20ம் பக்கத் தொடர்ச்சி) தனது தேசிய பட்டியல் நண்பரை காப்பாற்ற முடியவில்லை. ‘பாம்புக்கும் நோகாமல் கம்புக்கும் நோகாமல்’ அவர் எடுத்த முடிவு, ஜெயக்கொடி தானாக எடுத்த முடிவாக உலாவருகிறது. ரில்வின் சில்வாவுக்கு கணக்காய்வு அறிக்கை ஒரு துரும்பாக அமைந்தது.

மூன்று : சர்வதேச நாணய நிதியம் இது விடயத்தில் அரசாங்கத்திடம் இருந்து ஒரு காத்திரமான நடவடிக்கையை எதிர்பார்த்து நம்பியிருந்தது.

எதுவும் நடக்கவில்லை. இறுதியில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை அநுரவின் மேசையில் தூக்கிப் போட்டபோது அநுராவினால் எதுவும் செய்ய முடியவில்லை. இது கணக்காய்வு அறிக்கை வரும் வரை சர்வதேச நாணய நிதியம் காத்துக்கொண்டிருந்ததை உறுதிப்படுத்துகிறது.

ஜே.வி.பி- என்.பி.பி. அரசாங்கத்தில் அவதானிக்க கூடியதாக உள்ள ஒரு விடயம் விவகாரங்களை கையாளுவதில் அதன் மெத்தனப்போக்கு. அரச தலைமையொன்று தீர்மானங்களை, நேர்மையாக எடுக்கின்ற திறன் கொண்டதாக அமைய வேண்டும். எப்போதும் தீர்மானங்களை ஆறப்போட முடியாது. இந்த அணுகுமுறை பிரச்சினைக்கு தீர்வாக அன்றி பிரச்சினையாகவே அமைந்து விடுவது வழக்கம். மற்றொரு விடயம் ஒன்றை செய்து பராக்குகாட்டி அதன் நிழலில் இன்னொன்றை செய்யும் தந்திரோபாயம்.

ஆக மீனுக்கு தலைதான் முதலில் அழுகும்.:.கெடும்.:.நாறும் என்று கூறுவார்கள். இதனால் தான் மீன் வாங்கும் போது அதன் தலைப்பகுதியில் உள்ள செப்பட்டையை நீக்கி அதன் நிறத்தை பார்த்து மீனின் தரத்தை நுகர்வோர் நிர்ணயிக்கின்றனர். இந்த கருத்தில் இந்த அரசாங்கத்திற்கு இரு செய்திகள் உள்ளன.

முதலாவது: அதன் நிறம் மாறுகிறது என்ற செய்தி. இரண்டாவது : : தலை(மை) நாறினால் வாலும் நாறும் என்ற செய்தி

# அன்னை பூபதியின் நினைவு நாளில் சிந்திக்க வேண்டியவை!

19 ஏப்ரல் 2026 அன்னை பூபதியின் நினைவு நாள். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் என்றென்றும் நினைவு கூரப்படும் ஒரு தாயாக அவர் இருக்கிறார். இனியும் இருப்பார். ஏனென்றால் அவர் செய்த தியாகம் அத்தகையது.

திலீபனின் உண்ணாவிரதம் 12 நாட்கள். திலீபன் நீரோ உணவோ அருந்தவில்லை. அதைத் தாங்கும் அளவுக்கு அவருடைய உடலும் இருக்கவில்லை. ஏனென்றால் அவர் ஏற்கனவே குடலில் அறுவைச் சிகிச்சைக்கு உள்ளானவர். அதனால் அவருடைய உடல் பசியையும் தாகத்தையும் 12 நாட்கள் தான் தாங்கியது.

பூபதி அம்மாவின் உடல் 31 நாட்கள் தாங்கியது. பூபதி அம்மா நீர் அருந்தினார். இத்தனைக்கும் பூபதி அம்மா ஒரு போராளி அல்ல.போராளியின் தாய். 10 பிள்ளைகளின் தாய். ஒரு குடும்பப் பெண்ணாக அவர் போராட்டத்தை அடை காத்த அம்மாக்களில் ஒருவராகவும் இருந்தார். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டம் எனப்படுவது அன்னையரின் கண்ணீரால். அன்னையரின் பசி தாகத்தால் வளர்ந்த ஒன்று .

போராட்டத்தை அடைகாத்த அதாவது அடைக்கலம் தந்த வீடுகளின் அம்மாக்கள் போருக்குப் போன தமது பிள்ளைகள் பத்திரமாக திரும்பி வர வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருப்பார்கள். சிலர் சோறு சாப்பிடுவதில்லை. சிலர் பாண் மட்டும் சாப்பிட்டார்கள். வேறு சிலர் இருவேளை உணவு அருந்தினார்கள். சிலர் ஒருவேளை மட்டும் உணவு அருந்தினார்கள். இப்படிப் பார்த்தால் அன்னையரின் வயிற்றில் எரிந்த நெருப்பும் போராட்டத்தை வளர்த்தது.

பூபதி அப்படியொரு தாய் தான். மட்டக்களப்பில் அன்னையர் முன்னணி திலீபனைப் பின்பற்றி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டது. அந்தப் போராட்டத்தில் முதலில் ஈடுபட்ட அன்னம்மா டேவிட் போன்ற அம்மாக்கள் நிர்பந்தங்கள் காரணமாக போராட்டத்தைக் கைவிடவேண்டிய ஒரு நிலைமை தோன்றிய பொழுது பூபதி அம்மா தானாக முன்வந்து அந்தப் போராட்டத்தை கையில் எடுத்தார்.31 நாட்கள் பசியோடும் தாகத்தோடும் இருந்து உயிர் நீத்தார்.

தமிழ் மக்களுடைய போராட்ட வரலாற்றில் கிழக்கில் இருந்து ஒரு பெண் ஆளுமை அவ்வாறு தமிழ் மக்களின் கோரிக்கைகளை முன் வைத்து உயிர் நீத்தமை என்று பார்த்தால் பூபதி அம்மா பசியாலும் தாகத்தாலும் வடத்தையும் கிழக்கையும் இணைத்தார் எனலாம்.

ஒரு போராளி எப்பொழுதும் தியாகம் செய்யத் தயாராக இருப்பார். அது தான் போராட்ட மரபு. ஆனால் பூபதி அம்மா எந்த இயக்கத்திலும் இருந்தவரல்ல. பயிற்சி பெற்றவருமல்ல. எனினும் அவர் ஒரு போராளி போல பசியை தாக்கத்தை ஆயுதமாகக்கிப் போராடினார். அதனாலே தமிழ் மக்கள் மத்தியில் அவர் என்றென்றும் நினைவு கூரப்படும் ஒரு மகத்தான பெண் ஆளுமையாகத் திகழ்கிறார்.

பூபதி அம்மாவின் நினைவு நாளை முன்னிட்டு இந்தக் கட்டுரை இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறது. முதலாவது அன்னையர் முன்னணி என்ற சிவில் அமைப்பின் முக்கியத்துவம். இரண்டாவது .தம்மை அர்ப்பணித்துப் போராடாத தமிழ்த் தேசியக் கட்சிகள்.

முதலாம் கட்ட ஈழப்போர் கால கட்டத்தில் 1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதலாவது அன்னையர் முன்னணி தோன்றியது. இலங்கைத் தீவில் தோன்றிய முதலாவது அன்னையர் முன்னணி அது தான். அந்த அன்னையர் முன்னணிக்குள் பாதிக்கப்பட்ட அம்மாக்களும் பெருமளவுக்கு நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த செல்வாக்குமிக்க குடும்பங்களில் இருந்து வந்த துணிச்சலான பெண்களும் காணப்பட்டார்கள். இந்த அன்னையர் முன்னணி அந்தக் காலகட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் நீதி கேட்டு நடவடிக்கைகளில் இறங்கியது. இந்த அன்னையர் முன்னணிக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் இடையில் சில பல முரண்பாடுகள் ஏற்பட்டன. ஆனாலும் முதலாம் கட்ட ஈழப் போர் காலத்தில் தோன்றிய முக்கியமான சிவில் அமைப்பு என்ற அடிப்படை



யிலும், தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய முதலாவது அன்னையர் முன்னணி என்ற அடிப்படையிலும், இலங்கைத்தீவில் தோன்றிய முதலாவது அன்னையர் முன்னணி என்ற அடிப்படையிலும் யாழ்ப்பாணத்தின் அன்னையர் முன்னணிக்குப் பெரிய முக்கியத்துவம் உண்டு.

இவ்வாறு 84ஆம் ஆண்டு போராடத் தொடங்கிய அம்மாக்கள் 2006 வரை அதாவது இன்றுவரையிலும் தங்கள் பிள்ளைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் கொடுமையான உண்மை. இப்பொழுது காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் கணவர்களுக்காக அன்னையர் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 16 ஆண்டுகளிலும் தமிழ்த் தேசியப் பரப்பில் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருப்பது அந்த அன்னையர்கள் தான். தமிழ் மக்கள் மத்தியில் நடக்கும் பெரும்பாலான போராட்டங்களில் அரங்கில் முன்னணியில் நிற்பது அந்த அன்னையர்கள் தான். 42 ஆண்டுகளாக தேற்றப்படவியலாத அன்னையரின் துக்கம் தமிழ் மக்களின் போராட்டத்தில் உணர்வு பூர்வமான ஒரு பகுதியாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

42 ஆண்டுகளாக அன்னையரின் கண்ணீருக்கு முடிவில்லை. நீதியும் இல்லை. ஏன்?

இரண்டாவது விடயம், கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் அன்னையர்கள் தான் தொடர்ந்து போராடுகிறார்கள். அரசியல் கைதிகளும் அவ்வப்போது போராடினார்கள். இப்பொழுது தையிட்டியில் ஒவ்வொரு பௌர்ணமி நாளும் போராட்டம் தொடர்கிறது. இந்தப் போராட்டங்களில் பெரும்பாலானவை அவற்றுக்கென்று தனித்துவமான காரணங்களைக் கொண்டிருக்கின்றன. அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காகப் போராடுவார்கள். காணாமல் ஆக்கப்பட்டவரின் பெற்றோரும் உறவினரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்பதற்காக அல்லது அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகப் போராடுகிறார்கள். தையிட்டிப் போராட்டம் நிலப்பறிப்பு சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிரானது. இதில் ஒவ்வொரு போராட்டத்திற்கும் ஒவ்வொரு இலக்கு உண்டு. இவை பெரும்பாலும் ஏதோ ஒரு விவகாரத்தை மையமாகக் கொண்டு நடக்கும் போராட்டங்கள். இவற்றை ஒரு பெருந்தொகுப்பு ஆக்கினால் அவை பெரும்பாலும் நீதியைக் கேட்கும் போராட்டங்கள்.

கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்களின் இது போன்ற போராட்டங்கள் நீதிக்கான போராட்டங்களாகத் தான் காணப்படுகின்றன. இந்த இடத்தில் ஒரு கேள்வியைக் கேட்கலாம். நீதிக்கான போராட்டமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய போராட்டமும் ஒன்றா?

தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கூறுகிறார்கள், இன அழிப்புக்கு எதிரான நீதியே இனப்பிரச்சனைக்கு உரிய தீர்வாகவும் அமைய வேண்டும் என்று. அதனை அவர்கள் பரிகார நீதி என்று அழைக்கிறார்கள். தாயகத்தில் ஒரு பகுதியினரும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு தொகையினரும் இனப்பிரச்சினைக்கு பரிகார நீதியைக் கேட்கிறார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் ஆசனங்களை வென்ற தமிழரசுக் கட்சியும் உட்பட சில தமிழ்க் கட்சிகள் 2015ஆம் ஆண்டு நிலைமாறு கால நீதியை ஏற்றுக் கொண்டன. ஆனால் அந்தப் பரிசோதனையில் தாங்கள் தோற்றுப்போய் விட்டதாக சுமந்திரன் பின்னர் தெரிவித்தார். அதாவது ஐநாவின் மேற்பார்வையிலான நிலை மாறுகால நீதி ஒரு தோற்றுப் போன பரிசோதனை ஏன்னு அதன் தமிழ்ப் பங்காளி கூறுகிறார்.

நிலை மாறு கால நீதியின் கீழேதான் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்காக நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டு ஒரு புதிய யாப்பு இடைக்கால வரைபுவரை முன்னேறியது. அந்த யாப்பு உருவாக்க முயற்சியின் ஒரு கட்ட விளைவு தான் எனக்கிய ராஜ்ய என்று அழைக்கப்படுகின்ற இடைக்கால வரைபு.

தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது கிட்டத்தட்ட நான்கு வகைப்பட்ட தீர்வுகள்அல்லது முன்மொழிவுகள் மேசையில் உண்டு. முதலாவது பரிகார நீதி. அதை அதன் பிரயோக வடிவத்தில் சொன்னால் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வெகுசன வாக்கெடுப்பை நடத்துவது.

இரண்டாவது தீர்வு சமஸ்டி. மூன்றாவது எக்கிய ராஜ்ய. நான்காவது தீர்வு. 13ஆவது திருத்தத்தில் இருந்து தொடங்குவது இந்த நான்கு தீர்வுகள் அல்லது தீர்வு முன்மொழிவுகளுக்குள் இரண்டு தீர்வுகள் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் ஒப்புதலைப் பெற்றவை. அவையாவன .பதின் மூன்றாவது திருத்தம். எக்கிய ராஜ்ஜிய.

இந்த இரண்டு தீர்வுகளையும் தவிர ஏனைய தீர்வுகளைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் அவற்றுக்காகப் போராட வேண்டும். சமஸ்டியாக இருந்தாலும் சரி தமிழ் மக்கள் மத்தியில் நடாத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பாக இருந்தாலும் சரி இரண்டுக்குமாக தமிழ்மக்கள் போராட வேண்டும்.கொழும்புக்கு நோகத்தக்கதாகப் போராட வேண்டும். அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கத்தக்கதாகப் போராட வேண்டும். இதை அதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால், இலங்கைத் தீவின் அரசியல் வலுச் சமநிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும் அளவுக்குப் போராட வேண்டும்.

ஏனைய இரண்டு தீர்வுகளையும் பொறுத்தவரை குறிப்பாக எக்கிய ராஜ்யவுக்காக அதிகம் போராட வேண்டியிருக்காது. ஆனால் 13ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரையிலும் அதற்காகவும் போராட வேண்டும். ஏனென்றால் அது எழுதப்பட்ட போது இருந்த வடிவத்தில் இப்பொழுது இல்லை. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அது தோல் இருக்கச் சுளை பிடுங்கப்பட்டு விட்டது. எனவே பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவது என்று சொன்னால் அதற்கும் போராடத்தான் வேண்டும்.

இப்பொழுது மிகத் தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கிறது. போராடத் தயாராக இருந்தால் பருமனால் பெரிய தீர்வைக் கேட்கலாம். போராடத் தயார் இல்லை என்றால் எக்கிய ராஜ்யவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லலாம் அல்லது 13இல் இருந்து என்று கூறிக்கொள்ளலாம். எனவே இங்கு எது தீர்வு என்பதை எது தீர்மானிக்கிறது என்றால்.தமிழ் மக்கள் போராடத் தயாரா இல்லையா என்பது தான். இதை அதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால் தமிழ் மக்களை ஒரு போராட்டத்தை நோக்கித் தயார்படுத்தவும், அதற்குத் தலைமை தாங்கவும் குறிப்பிட்ட தீர்வுகளை முன்வைக்கும் தரப்புகள் தயாராக இருக்கின்றனவா இல்லையா என்பது தான்.

இதை ஏன் அன்னை பூபதியின் நினைவு நாளில் கூற வேண்டியிருக்கிறது? ஏனென்றால், அன்னை பூபதியைப் போல தன்னை ஒறுத்து, தனது பசி தாகத்தை ஆயுதமாக முன்வைத்து போராடத்தக்கவர்கள் எத்தனை பேர் இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் உண்டு? அன்னை பூபதியை ஆண்டுதோறும் நினைவு கூரும் கட்சிகள் மத்தியில் இருந்து ஏன் ஒரு அன்னை பூபதி கூடத் தோன்றவில்லை?

# “ரிக்ரொக்” (TikTok) தலைமுறையை வென்றெடுப்பது?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கடந்த மாதம் ஏழாம் தேதி யாழ்ப் பாணம் டில்கோ விடுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது. கட்சியின் செயலாளர் மத்தும பண்டார தொடக்க நிகழ்வில் கலந்து கொண் டார். பின்னர் நிகழ்ந்த கருத்தரங்கில் சுமார் 150க்கும் குறையாத இள வயதினர் கலந்து கொண்டார்கள். இவர்களில் அதிகமானவர்கள் 25–30 வயது வரையானவர்கள். கிட்டத்தட்ட ஐந்து பேர் 30வயதிற்கும் அதிகமான வர்கள்.

கலந்துரையாடலின் இறுதிக் கட்டத் தில் இளையோர் பேசினார்கள். அவர் களை 7 குழுக்களாகப் பிரித்து அவர் களிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. அதில் கிட்டத்தட்ட மூன்று குழுக் களைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிர்வாகக் காலத் தைப் புகழ்ந்தும் அவர்களுடைய



அரசியல் நடவடிக்கைகளைப் போற்றி யும் பேசியிருக்கிறார்கள்.

ஏனைய 4 குழுக்களைச் சேர்ந்தவர்கள் பெருமளவுக்கு தேசிய மக்கள் சக்தி யின் அரசாட்சியை ஆர்வத்தோடு பார்க்கிறார்கள் என்பதைத் தொகுத்துக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் அந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்திய ஐக்கிய மக்கள் சக்தியின் அரசிய லையோ அதன் தலைவர் சஜித் பிரேம தாசவையோ யாரும் புகழ்ந்து பேசிய தாக ஞாபகம் இல்லை என்று கூறப்படு கிறது. இது முதலாவது சம்பவம்

இரண்டாவது சம்பவம், அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு மருத் துவ முதலீட்டாளர் என்னிடம் கேட் டார்,''என்னுடைய 20 வயதுப் பிள்ளை கைபேசியில் பார்க்கும் ரீல்ஸ்களில் பெருமளவுக்கு அனுர தான் காணப்படு கிறார். ஏன் தமிழ்த் தேசியத் தலைவர் கள் ஒருவரையும் காணவில்லை? புதிய தொழில் நுட்பத் தளத்தில் யார் நிற்கிறார்கள்? எழுந்து வரும் ஒரு புதிய தலைமுறை எந்தத் தலைவரை எந்த அரசியலை ஆர்வத்தோடு பார்க் கிறது? என்று.

மூன்றாவது.அண்மையில் மன்னாரில் முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் அவர் களுடைய நினைவுப் பேருரை ஆற்று வதற்காக மன்னாருக்குச் சென்றிருந் தேன். என்னுடைய நண்பர் ஒரு வாகனத்தை ஒழுங்குபடுத்தித் தந்தார். அந்த வாகனத்தின் சாரதியாக வந்தவர் அரசியலில் ஆர்வம் உடையவராகக் காணப்பட்டார். ஒரு கட்டத்தில் அவர் தன்னை வெளிப்படுத்தினார். அவர் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர் என்பதையும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களோடு பழகு பவர் என்பதையும் அவருடைய பேச்சிலிருந்து உணரக் கூடியதாக இருந்தது. தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளை அவர் கடுமையாக விமர் சித்தார். என்பிபி அரசியல்வாதிகளை தோழர்கள் என்று வாஞ்சையோடு விழித்தார் .

மன்னாரிலிருந்து திரும்பி வரும் பொழுது ஒரு கட்டத்தில் அவர் எங்களோடு மனந்திறந்து கதைக்கத் தொடங்கினார். அவருடைய குடும்ப த்தில் இருவர் போராட்டத்தில் ஈடு பட்டிருக்கிறார்கள். ஒரு பெண் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முக்கிய பொறுப்பில் இருந்திருக்கிறார். இறுதிக் கட்டப் போரின் போது மோதல்கள் முடிவதற்கு சில நாட்களு க்கு முன் அவருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. அதன்பின் அவர் என்னவானார் என்பது யாரு க்கும் தெரியாது. அவருடைய தாயார் போய்ப் பார்த்த எந்த ஒரு ஜோதிட ராலும் அதைச் சொல்ல முடியவில்லை.

போரில் ஈடுபட்ட போரில் இழக்கக் கொடுத்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வர் தேசிய மக்கள் சக்திக்காக இப் பொழுது வேலை செய்கிறார். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தங்களைப் போன்று பாதிக்கப்பட்டவர்களைப் பயன்படுத்துகிறார்களே தவிர தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுத்தர வில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

எனினும் அவரிடம் நான் கேட்ட மிக அடிப்படையான கேள்விகளுக்கு அவரிடம் பதில் இருக்கவில்லை. விசு வாச நிலைப்பட்ட பதில்கள் தான் கிடைத்தன. கட்சியின் மூத்த தோழர் களிடம் அந்தக் கேள்விகளைக் கேட்டால் எனக்குப் பதில் கிடைக்கும் என்று சொன்னார்.

மேற்கண்ட மூன்று விடயங்களையும் தொகுத்துப் பார்க்கும்போது என்ன தோன்றுகிறது?

கடந்த சில ஆண்டுகளில் கிராம மட்டத்தில் சனசமுக நிலையங்கள்,மத நிறுவனங்கள் அரசசார்பற்ற நிறுவன ங்கள் போன்றவற்றால் ஒழுங்குபடுத்தப் படுகின்ற கூட்டங்களில் கதைக்கும் போது ஒரு விடயத்தைத் தொகுத்துக் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறான கூட்டங்களுக்கு அதிக மாக 40வயதைக் கடந்தவர்கள் தான் வருகிறார்கள். 30 வயதுக்குக் கீழ்ப் பட்டவர்கள் மிகக் குறைவு. ஏற்பாட் டாளர்களும் அதைக் கவனிப்பதில்லை. அல்லது ஏற்பாட்டாளர்களால் அந்த வயதுக்காரர்களை அணுக முடிய வில்லை.

அப்படியென்றால் தமிழ்த் தேசிய உரை யாடல் என்பது இப்பொழுது யார் மத்தியில் நிகழ்கிறது? சமூக வலைத் தளச் சூழலில் அதிகமாக அரசியல் விவாதங்களைக் காண்கிறோம். ஆனால் இந்த விவாதங்களில் 30 வயதிற்கு உட்பட்டவர்கள் அல்லது 20 வயதுக்கு உட்பட்டவர்கள் எத்தனை பேர் கலந்து கொள்கிறார் கள்? இவர்கள் எந்த அரசியலை விரும்பி ரசிக்கிறார்கள்? அல்லது ஆர்வத்தோடு பார்க்கிறார்கள்? இது தொடர்பாக தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் எந்தத் தமிழ்க் கட்சியிட மாவது உண்டா? ஏன் அதிகம் போவான்? எந்த ஒரு கட்சியிடமாவது இந்த வயதுக்காரர்களை ஒருங்கிணை க்கத்தக்க கட்டமைப்புகள் அல்லது வேலைத்திட்டங்கள் உண்டா?

தமிழ்த் தேசிய அரசியலானது அதிகம் உத்வேகம் பெற்ற காலகட்டத்தில் அதாவது 1960களின் பின்பகுதியில் இருந்து தமிழ்த் தேசியவாதம் முன் வைத்த கோஷங்கள் நியாயங்கள், தர்க்கங்கள் போன்றவற்றைத் தான் இப்பொழுதும் தமிழ்த் தேசியவாதிகள் உச்சரித்துக் கொண்டிருக்கிறார்களா?

ஆனால் தலைமுறைகள் தோறும் சுவைகளும், ரசனைகளும் தெரிவு களும் மாறி வருகின்றன. குறிப்பாக கைபேசிகளின் கைதிகளாக உள்ள ஒரு தலைமுறையின் கவனத்தைக் கவரத்தக்க விதத்தில் புதுப்பிக்கப்பட்ட உரையாடல்களை எத்தனை தமிழ்த் தேசிய கட்சிகள் முன்வைத்திருக் கின்றன?

தலைமுறைகள் தோறும் ரசனைகளும் ருசிகளும் மாறும்.இதற்கு மிகக் கூர்மையான ஓர் உதாரணத்தை இங்கு காட்டலாம். தமிழ்த் தேசியவாதம் தனி நாட்டுக் கோரிக்கையாக எழுச்சி பெற்ற காலத்தில் தாடி வளர்ப்பது என்பது மூன்றுவிதமாகப் பார்க்கப்பட்டது. ஒன்று சன்னியாசிகள். அதாவது முற்றி லும் துறந்தவர்கள் தாடி வளர்ப்பார்கள். இரண்டு, வாழ்க்கையில் விரக்தி அடைந்தவர்கள் அல்லது காதலில் தோல்வி அடைந்தவர்கள் அல்லது ஏதோ ஒரு விடயத்தில் தோல்வி அடைந்தவர்கள் அந்த விரக்தியின் தோல்வியின் சின்னமாக தாடியை வளர்ப்பதுண்டு. அது அந்த காலத்தில் தேவதாஸ் தாடி என்றும் அழைக்கப் படுவதுண்டு. மூன்றாவது புரட்சி யாளர்கள். அதாவது சமூகத்துக்காக தமது உடல் பொருள் ஆவி அனைத் தையும் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பவர்கள்.இவர்களும் தாடி வளர்ப் பார்கள்.

இது தான் அந்தத் தசாப்தத்தில் தாடி க்கு அர்த்தம். ஆனால் அதற்குப் பின்னரான கடந்த அரை நூற்றாண்டு காலத்தின் பின் இப்பொழுது தமிழில் திரைப்படங்களாகட்டும் திரைத் தொடர்களாகட்டும் எல்லாவற்றிலுமே தாடி கதாநாயக லட்சணமாக வந்து விட்டது. மண மேடைகளில், மண மகன் தாடியோடு காட்சி தருகிறார். முன்னைய தசாப்தங்களில் மண மேடைகளில் மணமகன் தாடியோடு இருப்பதை மூத்தவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அது விரக்தியின் அடை யாளம் என்று கூறி அதனை வழிக்கு மாறு வற்புறுத்துவார்கள்.

ஆனால் இன்றைக்கு தாடி ஒரு பொதுவான போக்காக, இள வயதுக் காரர்களின் பொது விருப்பமாக மாறி வருகிறது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் உக்கிரமடைந்த கால கட்டத்தில் காணப்பட்ட தாடியும் இப்பொழுது 2009க்கு பின்னரான கடந்த 16 ஆண்டுகளிலும் வளர்ந்து வரும் தாடியும் ஒன்றல்ல.

அப்படித் தான் 1970களில் காணப் பட்ட இலட்சியவாத வகைப்பட்ட உரையாடல்களும் கோஷங்களும் இப்பொழுதும் செல்லுமா? அல்லது அவை அப்டேட்–இற்றைப்படுத்தப்பட வேண்டுமா? அன்றைக்கு இருந்த இளைய தலைமுறைக்கு தமிழ்த் தேசியவாத அரசியலை எடுத்துக்கூறிய அதே பாணியில் அதே வார்த்தைகளில் இப்போதுள்ள தலைமுறைக்கும் அதை எடுத்துக்கூற முடியுமா?

இலட்சியங்கள் இறுதி இலக்குகள் மாறாது. ஆனால் அவற்றை எடுத்துக் கூறும் எடுத்துரைப்புகளிலும் எடுத்து ரைப்புப் பாணிகளிலும் மாற்றங்கள் தேவை. ஒரு தலைமுறையின் மொழி நடை உச்சரிப்பு எல்லாமே மாறிக் கொண்டு வருகின்றன. அதில் தாய் மொழியின் தனித்துவம், பிரதேச வழக்கு போன்றன தமிழ் சினிமா மொழியால் அதிகம் பிரதியீடு செய்யப் படுகின்றன. ஒரு வித நுனி நாக்குத் தமிழ் ஒரு பொதுவான பாணியாக மாறி வருகிறது.

தமது தாய் மொழியை வழுக்கி வழுக்கிக் கதைப்பது ஆங்கிலத் தனத்தோடு எடுப்பாக உச்சரிப்பது என்பது ஒரு பொதுப்போக்காக மாறி வருகிறதா? சினிமாப் பாத்திரங்கள் அல்லது தமிழ்த் திரைத் தொடர் பாத்திரங்கள் அல்லது சினிமா மற்றும் தமிழ்த் தோலிக் காட்சிகளின் நீட்சி யாகவும் அகட்சியாகவும் காணப் படுகிற நிகழ்ச்சிகள், அரங்குகளில் பயன்படுத்தப்படுகின்ற அதே மோடி ப்படுத்தப்பட்ட செயற்கையான சோடிக் கப்பட்ட, நுனி நாக்குத் தமிழை ஒரு தலைமுறை ஆர்வத்தோடு பேசு முயல் கிறதா?

கடந்த கிழமை யாழ் ரீகல் தியட்டரில் நீளிரா திரைக்காட்சியின் பின் நடந்த சந்திப்பில் தயாரிப்பாளரும் நெறியாள ரும் படப்பிடிப்பாளரும் நடிகர்களும் உட்பட ஒரு பகுதி கலைஞர்கள் வந்திருந்தார்கள். அவர்களோடு பார் வையாளர்கள் உரையாடினார்கள். அந்த உரையாடலில் நடுத்தர வயதைக் கடந்த குறிப்பிட்ட சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் முன் சொன்னது போல நுனி நாக்கால் தமிழ் பேசினார்கள். அதில் அனேகமானவர் கள் நீளிராவில் யாழ்ப்பாணத்துத் தமிழ் அதே பிரதேச வழக்கோடு பேசப்பட்டி ருப்பதைப் பாராட்டினார்கள். ஆனால் அதை ஒரு பகுதியினர் பாராட்டியது தமது தாய்த் தமிழ் பேச்சு வழக்கில் அல்ல. வணிக சினிமாவின் பெரு நிறுவன மேடைகளில் ஒலிக்கும் நுனி நாக்குத் தமிழில்.

ஒரு குறிப்பிட்ட வயதுக்காரர்களில் ஒரு பகுதியினரின் ஆர்வம் எது? ரசனை எது? விருப்பத் தெரிவு எது? என்பவற்றையெல்லாம் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் விளங்கி வைத்தி ருக்கிறார்களா? அல்லது அவர்களை விட அதிகமாக தேசிய மக்கள் சக்தி விளங்கி வைத்திருக்கின்றதா?

அண்மையில்,உடுவிலில்,கட்சிக்கான தொடர்பாடல் (16ம் பக்கம் பார்க்க)

# மாகாண ஆட்சிக் கூடாரத்தில் குடியேறும் கிராம ராஜ்யம்

பாராளுமன்ற ஆசனங்களில் ஐம்பதுக்கு ஐம்பது தராவிட்டால் வேறெதனையும் ஏற்கவும் மாட்டோம் கேட்கவும் மாட்டோம் என 1948 வரை இலங்கைத் தமிழர் மத்தியில் மேலாதிக்கம் செலுத்திய தலைப்பா கட்டிய மேட்டுக்குடி அரசியல் திரு ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தலைமை



யில் பயணித்தது.

1956ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து, தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்ற திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர், சமஸ்டியைத் தமது மாநாடுகளிலும் அறிக்கைகளிலும் வெளிப்படுத்திக் கொண்டாலும், அவ்வப்போது கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம், 1961ல் இரண்டுமாத மறியல் போராட்டம் என நடத்திய போதிலும், பாராளுமன்றக் கதிரைகளில் இருந்து தமிழ் மொழிக்கான சம அந்தஸ்து, அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற ஆக்கிரமிப்புகள் மற்றும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மேலாதிக்கம் பற்றிய ஒப்பாரிகளோடும் தமிழ் மக்கள் மத்தியில் மேடைகளில் வெள்ளை வேட்டி கட்டி முழங்கிய வீர வசனங்களோடும் காலம் கடந்ததே 1970 வரையான தமிழர் அரசியல்.

1970களில் தமிழீழ விடுதலை ஈழப் புரட்சி ஆயதம் தாங்கிய போராட்டம் என தலைதூக்கி செயற்பட்ட தமிழ் இளைஞர்களின் இளவயது உணர்ச்சி மிகு அறிவுக்குப் பின்னாலேயே சட்ட அறிவும் பாராளுமன்ற அரசியல் அநுபவமும் கொண்ட மூத்த தமிழர் அரசியற் பிரதிநிதிகளும் தமது அரசியல் வண்டியை கட்டிக் கொண்டு பயணம் செய்தனர்.

அதனது வெளிப்பாடே 1976ம் ஆண்டு வட்டுக் கோட்டை மாநாட்டுத் தீர்மானம். தமது பகுத்தறிவுக்கும், தர்க்க ஆற்றலுக்கும் கடைப் பிடித்து வந்த அரசியற் செயற்பாட்டு வழி முறைக்கும் தொடர்பில்லாத ஓர் அதி தீவிர அரசியற் தீர்மானத்தை மேற்கொண்டமையானது. அந்த தீர்மானத்தை இலக்காகக் கொண்ட ஒரு மக்கள் இயக்கத்தை அணி திரட்டுவதற்காகவா என்றால், இல்லை வேயில்லை. அது வெறுமனே 1977ம் ஆண்டு தேர்தலில் அமோக வெற்றியை அடைவதற்கான குறுக்கு அரசியல் மட்டுமே என்பது வெளிப் படை. அந்த வட்டுக் கோட்டை தீர்மானத்தை இப்போது மீள் வாசிப்பு செய்வதில் அர்த்தமில்லை. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்களே அதனை மூன்று ஆண்டுக்குள் மறுதலித்து, மறந்து போய், மாவட்ட சபைகளை ஏற்றதை நினைவிற் கொள்வது அவசியம்.

1983ம் ஆண்டு லட்சக் கணக்கில் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகப் போனதுவும், தமிழ் இளைஞர் இயக்கங்களின் ஆயுதங்கள் தாங்கிய போராட்டத்தின் தீவிரமும், இந்தியாவின் காத்திரமான ஈடுபாடும் கடைசியில் இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பில் ஒன்றாக மாகாண ஆட்சி முறையை அரசியல் யாப்பு பூர்வமாக புகுத்தின. 'இது இந்தியாவினால் இந்தியாவின் நலன்களுக்காக திணிக்கப்பட்ட ஒன்று' 'இது தமிழர்களின் அங்கீகாரம் பெற்ற ஒன்று அல்ல', 'இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இந்தியா அக்கறை காட்டவில்லை', 'இந்த மாகாண ஆட்சிக்கான அதிகாரங்கள் 1987ம் ஆண்டு இருந்தது போல இன்று இல்லை, அது குறைக்கப் பட்டும் கரைக்கப்பட்டும் கோதாகப் போய் விட்டது', 'அறிமுகப்படுத் தப்பட்டு 38 ஆண்டுகள் ஆகியும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத இந்த மாகாண ஆட்சி முறையை இப்பொழுது முழுமையாக நிறைவேற்று என்று கேட்பதில் என்ன பயன்' இப்படியாக பல தொடர் கேள்விகளைக் கொண்டதாக விவாதங்கள் மட்டுமே தமிழர்கள் மத்தியில் பிரபல்யமாக உள்ளன.

இப்போது ஒரு புறத்தார் 'சமஸ்டியைத் தவிர வேறெதனையும் தொட்டும் பார்க்க மாட்டோம்' என கூறுவது மட்டுமல்ல, இப்போதிருக்கும் மாகாண ஆட்சிமுறை ஒழிந்து போக வேண்டுமென விரதம் இருக்கின்ற விடாக்கண்டர்களாகவும் உள்ளனர்.

இன்னொரு புறத்தார், போன பாராளுமன்றத் தேர்தலில் விட்டதைப் பிடிப்பதற்கு எப்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் வரும் என தவம் இருக்கிறார்கள். வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடந்தாலும் அறுதிப் பெரும்பான்மை கொண்ட அணியாக ஒன்றுபட்டு உறுதியான ஆட்சியை அமைப்பார்களா என்ற சந்தேகம் ஒரு புறம் தொங்கிக் கொண்டிருக்க, மறுபுறம், இவர்கள் மாகாண ஆட்சி தொடர்பில் அதற்கான அதிகாரங்களை முழுமையாகவும் முறையாகவும் பெறுவது தொடர்பில் எவ்வளவுக்கு அக்கறையாக இருக்கிறார்கள்? அதற்கு எவ் வகையாக செயற்படப் போகின்றார்கள்? என்ற தொடர் கேள்விகளும் எழுகின்றன. இலங்கை அரசின் ஆட்சியில் இருப்போர் மனமுவந்து ஏதாவது தந்தால் சரி, இல்லையென்றால், கிடைக்கின்ற மாகாண சபைக் கதிரைகளோடும் அமைச்சர்கள் என்னும் வசதிகள் சலுகைகளோடும் ஒட்டியிருந்து கொண்டு, 'அரசாங்கம் அதிகாரங்கள் தரவில்லை', 'அரசாங்கம் நிதி தரவில்லை', 'மாகாண அதிகாரங்களை ஆளுநரே வைத்திருக்கிறார், ஆனபடியால் எதுவுமே செய்ய முடியவில்லை' என்ற குற்றச் சாட்டுகளோடு அதற்கு அடுத்த தேர்தலுக்கு தயாராவார்கள் என்றே இன்றைய தமிழ்க் கட்சிகளின் அரசியலை அடையாளமிட வேண்டியுள்ளது.

### பின்னே வரும் யானைக்கு முன்னே அடிக்குது மணியோசை

இப்போதுள்ள மாகாண ஆட்சி முறையின் இடத்தை கிராம சபைகள் மூலம் பிரதியீடு செய்கின்ற நிலையை நோக்கிய அரசியலையே சிங்கள பேரினவாதம் நீண்ட காலமாக முன்னெடுத்து வந்திருக்கின்றது. இந்த சிந்தனையை முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய தனது கனவாக புதிய அரசியல் யாப்பு வரைவில் எழுதிக் கொண்டிருந்தார் போய் விட்டார்.. அதுவே தான் இப்போது ஜனாதிபதி அநுராவின் ஆட்சியில் 'அடித்தட்டு மக்களுக்கே அரசியல் அதிகாரம்' என்ற சுலோகத்துடன் 'பிரஜா சக்தி' என்ற வடிவத்தில் முன்னகர்த்தப்படுவதாக எண்ணத் தோன்றுகிறது.

அநுரா அவர்களின் ஆட்சிக் காலத்தில் இது சட்டங்களால் உரமூட்டப் பட்ட வலுவான அடிமட்ட அதிகார நிறுவனமாக முழுமையடைகிறதோ இல்லையோ, நிச்சயமாக, அடுத்த தடவை ஆட்சியைப் பிடிக்கப் போகின்ற சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் தமது மேலாதிக்கத்துக்கு வசதியாக தமக்கேற்ற விதத்தில் அரசியல் பூர்வமான அதிகார கட்டமைப்பாக அதனை மாற்றி விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மாகாண சபைகள் தொடர்ந்து அரசியல் யாப்பில் இருந்தாலும் கூட, அவற்றினதும் மற்றும் உள்ளூராட்சி சபைகளினதும் அதிகாரங்கள் மீது காலப் போக்கில் இந்த 'கிராம சபைகள்' கணிசமாக செல்வாக்கு செலுத்தும் என்பதோடு இப்போது அரச அதிகார கட்டமைப்பில் ஏதோவொரு குறிப்பிட்ட அளவிலாயினும் பங்காளர்களாக இருக்கின்ற பிராந்திய கட்சிகளையும் மற்றும் தேசிய அளவிலான மாற்றுக் கட்சிகளையும் அந்நியப்படுத்தும் என்பதையும் இப் போதே கணிக்க முடியும்.

இந்தப் போக்கை தமிழர் தரப்பால் தடுத்து நிறுத்த முடியாது. இந்தியாவை நம்ப முடியாது நம்பக் கூடாது என மூச்சுக்கு முன்னூறு தடவைகள் உச்சரிக்கின்ற தமிழ்த் தேசக்காரர்கள், 'இலங்கை அரசு இவ்வாறு செய்வதை இந்தியா அனுமதிக்காது தடுத்து நிறுத்தும் என நம்புவதே பத்தாம் பசலித் தனம். 'இல்லையில்லை இந்தியா தனது நலனுக்காக அதனைத் தடுத்து நிறுத்தும்' என்று சொன்னால் இந்தியாவின் நலன் தமிழர்களின் நலன்களுக்கு அவசியம் என்றல்லவா ஆகிவிடும். இது முரண்பாடான சிந்தனை என்பதை விட தமிழர்கள் மத்தியில் நிலவும் போலித்தனமான போக்கிலித்தனமான சிந்தனையென்றே கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், தேர்தல் எப்போது வரும் அதன் வெற்றிக் கனிகளை எப்படிப் பறிக்கலாம் என்பதில் முனைப்பாக இருக்கும் தமிழ் அரசியல் பிரமுகர்கள் மாகாண ஆட்சிக்கான அதிகாரங்களுக்கு இந்தியாவே பொறுப்பு என சொல்லி விட்டு தாங்கள் பொறுப்பற்றவர்களாக இருப்பது வேதனைக் குரியது.

உரிமைகள் மீது படுத்திருப்பவனுக்கல்ல, விழிப்பாய் இருப்பவனுக்கே சட்டம் துணை செய்யும்' என நீதித்துறைக்கான கோட்பாடில் ஒரு வாக்கியம் இருக்கிறது.

இலங்கைத் தமிழர் சமூகம் இந்த மாகாண ஆட்சி முறையை தவற விட்டால் பரிணாமமமாகும் கிராம ஆட்சி முறையை அங்கீகரித்து, ஏற்று தமது அரசியல் சமூக பொருளாதார நலன்களை அதனூடாக காப்பாற்றிக் கொள்வதற்கு இப்போதே இலங்கைத் தமிழர் சமூகம் மனதை திடப்படுத்திக் கொள்ள வேண்டும்..

## “ரிக்ரொக்” (TikTok) தலைமுறையை.....

(15ம் பக்கத் தொடர்ச்சி) அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்து சுமந்திரன் ஆற்றிய உரை கவனிப்புக்குரியது. அதில் அவர் மக்களை நெருங்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். தமது வாக்காளர்களின் நாடித் துடிப்பைக் கண்டறிய வேண்டும் என்று அவர் யோசித்திருப்பது நல்ல விடயம். குறிப்பாக இளைய தலைமுறையை அரசியலில் உணர்திறன் மிக்கவர்களாக மாற்ற வேண்டியதன் அவசியத்தையும் அவர் உணர்ந்திருப்பதாகத் தெரிந்தது.

மக்களை நெருங்கிச் செல்ல வேண்டும். மக்களின் சுக துக்கங்களை அறிந்திருக்க வேண்டும்.மக்களின் நாடித்துடிப்பை அறிந்திருக்க வேண்டும். மக்களைத் திரட்டுவதற்கு அவை மிக அவசியம். அதேசமயம் மக்களை நெருங்கிச் செல்ல முன் தனது கட்சிக்குள்ளேயே ஒரு பகுதியினரை 75 வயதுடைய கட்சி நெருங்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. கட்சிக்குள் ஒரு பகுதியினரின் குமுறல்களையும் கொதிப்பையும் வெறுப்பையும் கசப்பையும் அப்படியே நீறுபூ த்த நெருப்பாகப் பேணிக்கொண்டு எங்களுக்குள் ஒரு பிரச்சினையும் இல்லை. நாங்கள் பலமாகத் தான் இருக்கிறோம் என்று கூறிக் கொண்டிருக்க முடியாது. தேசத்தைத் திரட்ட முன் கட்சியைத் திரட்ட வேண்டும்.

# நடிகர் விஜய்யின் கட்சி ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தை எதிர் கொள்வதற்கு தயாராக வேண்டிய நிலையில் தமிழகக் கட்சிகள்!



கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கவிதா முரளிதரன்

2021ஆம் ஆண்டு வரையிலான பல தசாப்தங்களாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மறைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க.) தலைவரான மு.கருணாநிதியின் நிழலில் காத்திருக்கும் ஒரு தலைவராகவே நோக்கப்பட்டார். அதனால், 2026 சட்டசபைத் தேர்தல் அவருக்கும் தி.மு.க.விற்கும் ஒரு தனித்துவமான தனிப்பட்ட மைல்கல்லாக அமைகிறது.

73 வயதான முதலமைச்சர் தனது முதல் பதவிக்காலத்தை நிறைவு செய்துள்ளார். இரண்டாவது முறையும் ஆட்சியைப் பிடிக்க அவர் மேற்கொள்ளும் முயற்சி, அவரது ஆட்சியின் செயற்பாடுகளை ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

2021ஆம் ஆண்டு வரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க.) ஆட்சியில் இருந்த போது தி.மு.க. பத்து ஆண்டுகளை வனவாசத்தில் கழித்தது. அது ஒரு மாற்றத்திற்கான காலமாகவும் இருந்தது. 2018 ஆம் ஆண்டில் கருணாநிதி காலமானார், ஸ்டாலின் கட்சித் தலைமையை மட்டுமல்லாமல், தேர்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியான சிக்கலான சவால்களையும் மரபுரிமையாகப் பெற்றார்.

அவர் அந்த சவால்களை திறமயாக வெற்றி கொண்டார். 234 ஆசனங்களைக் கொண்ட சட்டசபையில் 2021 ஆம் ஆண்டில் தி.மு.க. 133 ஆசனங்களைப் பெற்றது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ஒட்டுமொத்தமாக 159 ஆசனங்களை வென்றது. அ.தி.மு.க.வின் ஆசனங்கள் 66 ஆகக் குறைக்கப்பட்டது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, சொல்லாடல்கள் தொடர்ச்சியை உணர்த்தினாலும், மாற்றம் தெளிவாகத் தெரிகிறது. நலத்திட்ட உதவிகள், சமூக நீதி மற்றும் உறுதியான கூட்டாட்சி நிலைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய 'திராவிட மாடல்' (Dravidian Model) ஆட்சியை ஸ்டாலின் நிலைநிறுத்தியுள்ளார்.

2026 தேர்தல் அறிக்கையானது இதனை 'திராவிட மாடல் 2.0' என்று முன்னிலைப்படுத்துகிறது. இப்போது அதன் அளவு மற்றும் மக்களைச். சென்றடைதலில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

### திராவிட மாடல்

2021ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட அல்லது விரிவுபடுத்தப்பட்ட முதன்மைத் திட்டங்கள் தி.மு.க.வின் பரப்புரைக்கு முதுகெலும்பாக உள்ளன. அவற்றில கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்: குடும்பத் தலைவிகளுக்கு நேரடிப் பணப் பரிமாற்றம் வழங்கும் திட்டம்.

மகளிருக்கு இலவசப் பேருந்து பயணம், பள்ளி மாணவர்களுக்கான

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்,

புதுமைப் பெண் திட்டம், மாணவிகளின் உயர் கல்விக்கு ஆதரவு அளித்தல், நான் முதல்வன் திட்டம், இளைஞர்களின் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துதல், மக்களைத் தேடி மருத்துவம், வீட்டு வாசலுக்கே வரும் சுகாதாரத் திட்டம் ஆகியவை அடங்கும். இந்தத் திட்டங்கள் சாதி மற்றும் வர்க்க பாகுபாடுகளைக் கடந்து பயனாளிகளின் ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் சுமார் 1.31 கோடி பெண்கள் பயனடைந்துள்ளதாக தி.மு.க. அரசு கூறுகிறது. மேலும், 2024–25 நிதியாண்டில் 11.2 சதவீத வளர்ச்சி விகிதத்தை (இது 14 ஆண்டுகளில் இல்லாத உச்சம் என்பதுடன் தேசிய சராசரியை விட இரு மடங்கு அதிகம்) சான்றாகக் காட்டி, நலத்திட்ட விரிவாக்கம் பொருளாதாரச் செயற்பாடுகளைப் பாதிக்கவில்லை என்று தி.மு.க. வாதிடுகிறது.

2021 ஆம் ஆண்டின் வெற்றி வாய்ப்பு மிகக் குறைவாக இருந்த பகுதிகளில் நலத் திட்டங்களைக் கொண்டுசென்று சேர்ப்பதில் தற்போது கூடுதல் கவனம் செலுத்தப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### தொடர் போர்க்களங்கள்

அதேவேளை இந்தத் தேர்தலை மத்திய-மாநில உறவுகளுக்கு இடையிலான ஒரு பெரிய போராட்டத்தின் ஒரு பகுதியாக தி.மு.க. கட்டமைத்துள்ளது. இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்திற்குள் தமிழ்நாட்டின் தன்னாட்சி உரிமையைப் பாதுகாக்கும் ஒரு காவலனாக திராவிடக் கட்சி தன்னை நிலை நிறுத்திக் கொள்கிறது.

ஸ்டாலினின் அரசியல் செய்திகளில் கூட்டாட்சித் தத்துவம் ஒரு முக்கியத் தூணாகத் தொடர்கிறது. சரக்கு மற்றும் சேவை வரி (GST) வருவாயில் மாநிலங்களுக்கான பங்கை அதிகரிப்பது உள்ளிட்ட கூடுதல் நிதிப் பகிர்வுக்கான கோரிக்கைகளை தி.மு.க. மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம், தேசியக் கல்விக் கொள்கை ஆகியவற்றை எதிர்ப்பதுடன், உயர்கல்வியில் 'நீட் 'போன்ற மத்திய நுழைவுத் தேர்வுகளை இரத்து செய்ய வேண்டும் என்றும் தி.மு.க. கோரியுள்ளது.

உண்மையில், கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று தொடர்ந்து வாதிடும் தி.மு.க., இந்தித் திணிப்புக்கு எதிரான தனது நீண்டகால நிலைப்பாட்டையும் உறுதிபடத் தெரிவித்துள்ளது. இந்த நிலைப்பாடுகள் புதியவை அல்ல என்றாலும் தற்போதையச் சூழலில் அவற்றிற்கு அளிக்கப்படும் கூடுதல் முக்கியத்துவம் ஒரு மூலோபாய நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இந்தத் தேர்தலை 'தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும்' இடையிலான போட்டியாகச் சித்தரிப்பதன் மூலம் மாநிலத்தின் பிராந்திய அடையாளத்தை ஒருங்கிணைக்கவும் தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் (பாஜ.க.) வின் விரிவாக்க முயற்சிகளை முறியடிக்கவும் தி.மு க. முயற்சிக்கிறது. ஸ்டாலினின் மகனும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் இந்தத் தேர்தலை 'நமது முதலமைச்சருக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான போட்டி' என்று அழைக்கும் அளவிற்குச் சென்றுள்ளார்.

தி.மு.க.வின் முதன்மைச் சவாலாக அதன் பழைய எதிரியான அ.தி.மு.க. விளங்குகிறது. முன்னாள் முதலைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க பா.ஜ.க.வுடன் சுமுகமற்ற ஒரு உறவையே கொண்டிருக்கிறது. ஒரு வருடத்துக்கு முன்னர் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மீண்டும் இணைந்த போதிலும், அக்கூட்டணியில் ஒரு மேலாதிக்க சக்தியாகத் தன்னைத் தக்க வைத்துக் கொள்ள அ.தி.மு.க. கடுமையாகப் போராடி வருகிறது. கூட்டணிச் சிக்கல்களில் இருந்தும் அது தப்பவில்லை.

மறைந்த விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகமும் (தே.மு.தி.க.) கலகக் குரல் எழுப்பிய முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வமும் தி.மு.க. அணிக்கு மாறியுள்ளனர். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான வி.கே. சசிகலா தனது சொந்த அரசியல் கட்சியைத் தொடங்கி, (பா.ம.க.) நிறுவனர் டாக்டர் எஸ். ராமதாஸூடன் கை கோர்த்திருக்கிறார். அதேவேளை, ராமதாஸின் மகன் அன்புமணி ராமதாஸ் தலைமையிலான ஒரு பிரிவினர் அவரைத் தனிமைப் படுத்திய நிலையில் அவர் தவித்து வருகிறார்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் நீடிக்கும் ஓ. பன்னீர்செல்வம் அணிக்கு 18 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இது பாரதிய ஜனதா கட்சிக்கு (பாஜக) ஒதுக்கப்பட்ட 27 இடங்களுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய பங்காகும். சசிகலாவின் உறவினர் டி.டி.வி. தினகரன் தலைமையிலான அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தனது பிணைப்பைத் தொடர்ந்து 11 இடங்களில் போட்டியிடுகிறது.

குறிப்பிடத்தக்க வகையில், அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள சில சிறிய கட்சிகள் பா.ஜ.க.வின் தாமரைச் சின்னத்தில் போட்டியிடுகின்றன. இது ஒரு அசாதாரணமான நடவடிக்கையாகவும், மாறிவரும் அரசியல் சீரமைப்புகளின் அறிகுறியாகவும் பார்க்கப்படுகிறது. இந்த கட்சிகளில் பல, அ.தி.மு.க. வை விட பா.ஜ.க.விடமே அதிக பணிவு காட்டுகின்றன.



பா.ஜ.க.வின் தேசியத் தலைவர்கள் எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சர் வேட்பாளராகப் பெயர் குறிப்பிட்டு அழைப்பதைத் தவிர்ப்பதும் இத்தகைய பிம்பத்தை வலுப்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே, அ.தி.மு.க.வை 'வடக்கத்தைய' பா.ஜ.க. விடம் அடிபணிய வைத்து விட்டார் என்று எடப்பாடி பழனிசாமி மீது கடுமையான விமர்சனங்கள் எழுகின்றன. முதலமைச்சர் ஸ்டாலின் இதனை 'அடிமைச் சாசனம்' என்று கடுமையாகச் சாடி வருகிறார்.


### புதிய திருப்பம்

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் (த.வெ.க.) ஒரு புதிய திருப்பமாக விளங்குகிறது. தி.மு.க. – அ.தி.மு.க.என்ற இருமுனைப் போட்டியைத் தாண்டி வாக்கு விகிதத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு சக்தியாக நடிகர் விஜய்யின் த.வெ.க. உருவெடுத்திருக்கிறது. சில கருத்துக் கணிப்புகளின் பிரகாரம், இந்த கட்சி இரட்டை இலக்க வாக்கு விகிதத்தைப் பெறக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது ஒரு மிகப் பெரிய சாதனையாகக் கருதப்படும்.


ஆனால் மூத்த பத்திரிகையாளர் பிரியன் சீனிவாசன் இது குறித்துக் கூறுகையில், விஜய்யைச் சுற்றியுள்ள அரசியல் நகர்வுகள் கணிக்க முடியாதவை என்கிறார்.

அவரது கூட்டங்களுக்குப் பெரும் திரளான மக்கள் வருகின்றனர். ஆனால் அவர் யாருடைய வாக்குகளைப் பிரிப்பார் என்பதே முக்கியமான கேள்வி. அ.தி.மு.க. விற்குச் செல்ல வேண்டிய தி.மு.க. எதிர்ப்பு வாக்குகளா? தி.மு.க. விற்குச் செல்லும் சிறுபான்மையினர் வாக்குகளா? அல்லது கடந்த 2021 ஆம் (18ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசிராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். உத்யோகத்தில் அடுத்த வரை நம்பி பொறுப்புக்களை ஒப்படை ப்பதை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உததியோகத்தில் எதிர் பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உத்யோ கத்தில் இருப்பவர்கள் நிதானம் தேவை.





கடகராசி அன்பர்களே! தேவையற்ற வீண் படபடப்பு ஏற்படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும்.





சிம்மராசி அன்பர்களே! வீண் மனக்கவலைகள் நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான செய லில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.





துலாம் ராசி அன்பர்களே1 சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்களில் வேகம் பிறக்கும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மன வருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப் பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம்.








தனுசுராசி அன்பர்களே! பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். நண்பர்கள் மூலம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக் கிடையே இருந்த இடைவெளி குறையும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தைகளில் நிதானம் அவசியம்.




மீனராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசுலாகும். உத்யோகத்தில் வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஈழத்தமிழர் அரசியல் என்பது தோல்விக்கான காத்திருத்தலா?

(12ம் பக்கத் தொடர்ச்சி) அரசியல் இயக்கங்கள் அனைத்தும் அப்படித் தான் வெற்றி பெற்றிருக்கி ன்றன. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் கணிசமான அரசியல் அதிகாரங்களை பெற்றிருக்க முடியும் என்றால் அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலத்தில் தான் அடைந்திருக்க முடியும்.

ஒஸ்லோ பேச்சுவார்த்தையை ஒரு சமஸ்டிக்கான பொறியாக மாற்றியிருந்தால், அது சாத்தியப்பட்டிருக்கும். அரசியல் என்பது அடிப்படையில் ஒரு தரப்பு அதன் பலம் கொண்டு மற்றவர்களுடன் பேரம் பேசுவது தான். பேரம் பேசுவதற்கான பலம் இல்லாத போது எதிர்பார்ப்புக்கள் என்பது வெறும் கோசங்கள் மட்டுமே! இப்போது நம்மிடமுள்ள சமஸ்டிக் கோசம் போன்று.

இலங்கைத்தீவில் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் ஏற்பாட்டை சட்டரீதியில் உறுதிப்படுத்த வேண்டும் என்றால் அது பெரும்பான்மையின் இணக்கப்பாட்டுடன் மட்டும் தான் மேற்கொள்ள முடியும். சிங்கள மக்களை முற்றிலும் தனிமைப்படுத்தி இலங்கைத்தீவில் ஒரு தீர்வை ஒரு போதுமே அடைய முடியாது. வேண்டுமானால் அவ்வாறான பகல் கனவுகளை காணலாம். அதுதான் இதுவரையான அரசியல் வரலாறு.

தற்போதுள்ள மாகாணசபை முறைமையானது, இந்தியாவின் தலையீட்டினால் நிகழ்ந்தது என்றாலும் கூட ஜே.ஆர் ஜெயவர்த்தன அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன் தான் அது நிகழ்ந்தது. அவ்வாறான இணக்கப்பாட்டை நோக்கி இறங்கி வரச் செய்வதற்குத் தான் தமிழ் இயக்கங்களுக்கு இந்தியா பயிற்சியளித்தது. தமிழ் இயக்கங்களுக்கான ஆயுதப் பயற்சி என்பது, அடிப்படையில் கொழும்பின் ஆட்சியாளரை இறங்கி வரச் செய்வதற்கான ஒரு அழுத்தமும்,

அதே வேளை,தமிழரின் பேசம் பேசும் பலத்தை அதிகரிப்பதற்கான ஒரு உக்தியும் தான். இந்தப் பின்புலத்தில் தான், அரசியலமைப்பில் 13வது திருத்தச்சட்டம் சட்டமாக்கப்பட்டது. அது சட்ட மாக்கப்பட்டால் தான் இப்போதும் எஞ்சியிருக்கின்றது.

ஈழத் தமிழர் அரசியல் என்பது தோல்விக்கான காத்திருத்தலா? இலங்கைத் தீவில் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் ஏற்பாட்டை சட்ட ரீதியில் உறுதிப்படுத்த வேண்டும் என்றால், அது பெரும்பான்மையின் இணக்கப்பாட்டுடன் மட்டும் தான், மேற்கொள்ள முடியும். சிங்கள மக்களை முற்றிலும் தனிமைப் படுத்தி இலங்கைத்தீவில் ஒரு தீர்வை ஒரு போதுமே அடைய முடியாது. வேண்டுமானால், அவ்வாறான பகல் கனவுகளை காணலாம்.

# நடிகர் விஜய்யின் கட்சி ஏற்படுத்தக் கூடிய

(17ம் பக்கத் தொடர்ச்சி) ஆண்டில் சீமானின் நாம் தமிழர் கட்சி (நா.த.க.) பெற்ற 6.6 சதவீத இளைஞர் வாக்குகளா? பிரிக்கப்படப் போகிறது என்பது இன்னும் புதிராகவே உள்ளது' என்று அவர் குறிப்பிடுகிறார்.

### மாறிவரும் அரசியல் காரணிகள்

தமிழக அரசியல் என்பது மத துருவ முனைப்பை விட சாதி கூட்டணிகள், பிராந்திய சீரமைப்புகள் மற்றும் நலத் திட்டங்கள் மூலமாகவே தீர்மானிக்கப்படுகிறது. தி.மு.க. கூட்டணி வழக்கமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர், சிறுபான்மையினர் மற்றும் பெரியாரியக் கொள்கையுடைய நகர்ப்புற வாக்காளர்களின் ஆதரவைப் பெறுகிறது.

மேற்கு தமிழகத்தில் (கொங்கு மண்ட லம்), கொங்கு வெள்ளாள கவுண்டர் கள் பாரம்பரியமாக அ.தி.மு க.வை ஆதரித்து வருகின்றனர். அண்மைக் காலமாக தி.மு.க. இங்கு ஊடுருவ முயன்றாலும், அந்தச் சமூகத்தைச் சேர்ந்த எடப்பாடி பழனிசாமியின் இரு ப்பு அ.தி.மு.க.விற்கு ஒரு பாதுகாப் பைத் தருகிறது.

ஆனால், இந்த கவுண்டர் மையத் தலைமை, தெற்கு மாவட்டங்களில் உள்ள தேவர் சமூகத்தினரிடையே ஒரு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அ.தி.மு.க.வில் தங்களது தனித்துவம் குறைந்து விட்டதாக அந்த சமூகத்தினர் கருதுகின்றனர். இந்த இடைவெளியை நிரப்பவே, தேவர் சமூக வாக்குகளைக் கொண்ட டி.டி.வி. தினகரன் கூட்டணியை அ.தி.மு.க. ஏற்படுத்தியிருக்கிறது. வட மாவட்ட ங்களில் பா.ம.க.வின் பிளவு காரணமாக வன்னியர் சமூக வாக்குகள் சிதறடிக்கப் படுவதற்கு வாய்ப்புள்ளது.

### இளைஞர்களின் வாக்குகள்

தமிழகத்தில் 30 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மொத்த வாக்காளர்களில் சுமார் 20.7 சதவீதமாக் (1.17 கோடி பேர்) உள்ளனர். இவர்கள் வழக்கமான அரசியல் முறைகளைத் தாண்டி வாக்களிக்கும் போக்கைக் கொண்டவர்கள். கடந்த முறை நாம் தமிழர் கட்சியின் தமிழ் தேசியவாதத்தால் ஈர்க்கப்பட்ட இவர்கள், இந்த முறை விஜய்யின் பக்கம் சாய வாய்ப்புள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு, அனைத்துக் கட்சிகளும் டிஜிட்டல் பிரசாரத் தில் தீவிரமாக உள்ளன. முதலமைச்சர் ஸ்டாலின், ஜென்-இசட் (Gen Z) இளைஞர்களுடன் உரையாடும் 'Vibe with MKS' என்ற இன்ஸ்டாகிராம் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். தி.மு.க. 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில் புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணியிலும் தி.மு.க. ஈடுபட்டுள்ளது. வழக்கம் போல, இரு திராவிடக் கட்சிகளும் இலவசங்கள் மற்றும் சலுகைகளை அறிவிப்பதில் போட்டி போடுகின்றன. மறுபுறம், எதிர்க்கட்சிகள் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைத் தங்களின் முக்கிய பிரசார ஆயுதமாக முன்னெடுத்துள்ளன.


### முடிவுரை

2026 தேர்தல் தமிழக அரசியலில் ஒரு மாற்றத்திற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளது. திராவிடக் கட்சிகள் இன்னமும் ஆதிக்கம் செலுத்தினாலும், புதிய சக்திகளும் ஒரு தேசியக் கட்சியும் மெதுவாக இடம் பிடிக்க முயல்கின்றன. திமுகவிற்குத் தனது 'திராவிட மாடல்' ஆட்சியைத் தக்க வைப்பதே சவால் அ.தி.மு.க.விற்கு ஆளும் கட்சிக்கு எதிரான வாக்குகளை ஒருங்கிணைப்பதே இலக்கு.

இத்தகைய சூழ்நிலையில் விஜய்யின் கட்சி ஏற்படுத்தும் தாக்கத்தை எதிர்கொள்வதற்கு அனைத்துக் கட்சிகளும் தயாராக வேண்டியிருக்கிறது. 2026 தேர்தல் தீர்ப்பு தமிழக அரசியலின் அடுத்த கட்டப் பயணத்தைத் தீர்மானிக்கும் என்பதில் ஐயமில்லை. (நன்றி:- இன்டியா ருடே)

# பதவிகளுக்காகப் பந்தாடப்படும் தமிழ்த்தேசியமும் துரோகிப் பட்டமும்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -






சுதந்திரத்துக்குப் பின்னரான ஈழத் தமிழர் அரசியலில் அதிகம் பயன்படுத்தும் சொற்றொடர்கள் எனில் அவை தமிழ்த் தேசியம் மற்றும் தமிழினத் துரோகி என்பவையாகவே இருக்கமுடியும். அது மட்டுமன்றி நாட்டில் இனப்பிரச்சினையின் விரிவுடன் இவ்விரு சொற்றொடர்களின் பயன்பாடும் விரிவடைந்து வந்துள்ளதையும் காணமுடியும்.

தேசிய இனம் என்ற அடிப்படையில் ஈழத்தமிழர்களது தேசியம் சார் பண்புகளை வரையறுப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதி விதிகள் காணப்பட்டாலும் துரோகி என்பதை வரையறுப்பதற்கு எவ்வகையான தகுதிவிதிகளை அரசியல்வாதிகள் கையாள்கிறார்கள் என்பது இன்றுவரை புரியாத புதிராகவே இருந்து வருகிறது.

ஒருவருக்குத் துரோகிப்பட்டம் சூட்டுவது மட்டுமன்றி தமிழ்த் தேசியம், தமிழ்த்தேசியக் கட்சிகள் என்பனவும் கூட ஒவ்வொருவரும் தமக்கேற்றபடி வரையறுத்துக் கொள்ளும் சொற்களாகவே மாறி விட்டன. இத்தகைய போக்கின் அண்மைய வெளிப்பாடுதான்




நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீளவும் ஒருமுறை சந்திரகுமாருக்கு வழங்கியுள்ள துரோகிப் பட்டம்.

தமிழ் அரசியல் கட்சியொன்று அல்லது அதன் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் சேராதிருக்கும் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடன் சேர்ந்திருப்போர் அவர்களின் பார்வையில் தமிழினத் துரோகிகள். ஆனால் அவ்வாறு கூறிய தலைவர்கள் பின்னர் அரசாங்கத்துடன் சேர்ந்திருந்தால் துரோகிகளல்லர், அவர்கள் தமிழ்த் தேசியவாதிகள். இவ்வாறு தான் 198 க்கு முன்னர் இலங்கைத் தமிழரசுக்கட்சி மக்களக்குச் சொல்லிக் கொடுத்து. அந்த அடிப்படையில் தான் ஜி.ஜி. பொன்னம்பலமும் அவரது கட்சியினரும் துரோகிகளென்றும் தமிழரசுக்கட்சியினர் தேசியவாதிகளாகவும் சொல்லப்பட்டனர்.

ஆயுதப் போராட்ட காலமும் கூட இதற்கு விதி விலக்கானதல்ல. யுத்த காலத்திலும் அதன் பின்னரும் துரோகிப் பட்டத்துடன் ஒட்டுக்குழு என்ற புதுச் சொல்லும் சேர்ந்து கொண்டது. யுத்தத்துக்குப் பின்னரான காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் சேராதிருந்த காலத்தில் அரசாங்கத்துடன் சேர்ந்திருந்த டக்ளஸ் போன்றவர்கள் துரோகிகள்.

ஆனால் முன்னர் தமிழரசுக்கட்சியும் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்த நல்லாட்சிக் காலத்திலும் சரி, எதிரானவர்களாக நடித்த மகிந்த காலத்திலும் சரி தாமே உருவாக்கிக் கொண்ட துரோகிப் பட்டம் தம் மீது விழுந்து விடும் என்பதற்காக அமைச்சுப் பதவிகளை மட்டும் எடுக்கவில்லை. ஆனால் அதைவிடக் கூடுதலான வரப்பிரசாதங்களை அக்காலத்தில் அவர்கள் பெற்றுக் கொண்டனர். டக்ளஸ் அல்லது அங்கஜன் ஜனாதிபதியையோ அல்லது அமைச்சர்களையோ வடக்கில் வரவேற்றால் அது தமிழர்க்கு துரோகமானது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ்வாறு வரவேற்பதுவும், தமது வீட்டு பிறந்த நாளுக்கு அழைத்து மகிழ்வதும் தமிழ்த் தேசியம் சார்ந்தது. இது போலவே யுத்த காலத்தில் இராஜவரோதயம் சம்பந்தனுக்குத் தேசிய தலைவராகத் தெரிந்த பிரபாகரன் பின்னர் பயங்கரவாதியாகவும் அரச பயங்கரவாதியாகத் தெரிந்த மஹிந்த ராஜபக்க்ஷ பின்னர் தேசிய தலைவராகவும் மாறினார்கள். அது மட்டுமன்றி தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் இருக்கும் வரை ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளொட்



என்பன தமிழ் தேசியவாதிகள். அதற்கு வெளியில் விட்டபின் அவர்கள் ஒட்டுக்குழுக்கள். அவ்வாறு கூறியவர்களுக்கு இப்போது அவர்களின் தேவை அவசியப்படும் போது மீண்டும் அவர்கள் தேசியவாதிகளாக மாறி விட்டனர்.

முன்னர் தீண்டத்தகாதவர்களாக இருந்தவர்கள் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்காகப் புனிதர்களாக மாறி விட்டனர். முன்னர் பயங்கரவாதிகளாகத் தெரிந்த போராளிகள் இப்போது சிலருக்கு தியாகிகள். இவ்வாறு நமது அரசியல் தலைவர்களின் துரோகிகள், ஒட்டுக்குழுக்கள், தேசியவாதிகள், பயங்கரவாதிகள், தியாகிகள் வகைப்படுத்தல்கள் எல்லாம் அவரவர் நலன் சார்ந்ததே அன்றி மக்கள் நலன்சார்ந்தவையல்ல.

சந்திரகுமார் மீது சிறீதரன் முன்வைக்கும் பிரதான குற்றச்சாட்டு இனப்படுகொலை அரசாங்கத்துடன் இணைந்திருந்து அதற்கு ஆதரவான செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்பது. அதனால் அவர்களுடன் இணைந்து அரசியல் செய்ய முடியாது என்பது. அது உண்மையானால் இதேபோல இறுதி யுத்தம் வரையும் அரசாங்கத்துடன் துணை இராணுவக் குழுவாகச் செயற்பட்ட புளொட்டை 2013 இல் கூட்டமைப்புக்குள் உள்வாங்கும் போது இது போன்ற எதிர்ப்பை சிறீதரன் ஏன் வெளியிடவில்லை? சித்தார்த்தனுக்கு ஏன் துரோகிப்பட்டம் வழங்கவில்லை? பின்னர் மஹிந்தவின் செல்லப்பிள்ளை சாணக்கியனை தனது சொந்தக் கட்சிக்குள்ளேயே உள்வாங்கிய போது ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை? கூட்டமைப்பாக அவர்களுடன் இணைந்து அரசியல் செய்ய முடியாது என்று ஏன் ஒதுங்கவில்லை? இன்று அவரின் தலைமையின் கீழ் பாராளுமன்றத்தில் செயற்பட முடியாது என்று ஏன் கொடிபிடிக்கவில்லை. துரோகிப்பட்டத்துக்கான தகுதிவிதிகள் எல்லோருக்கும் ஒன்றுதானே. ஏனெனில் சித்தார்த்தனாலோ அல்லது சாணக்கியனாலோ தனது கிளிநொச்சி வாக்கு வங்கிக்கு எந்தச் சேதாரமும் ஏற்படாது என்பதும், சந்திரகுமாரை உள்வாங்குவது தனது அடிமடியில் கை வைப்பதற்கு ஒப்பானது என்பது சிறீதரனுக்கு நன்றாகவே தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றம் எமக்கு ஒரு பாடத்தைத் தருகிறது. கூட்டமைப்புக்குள் உள்வாங்கிய போராளிக்குழுக்களான ரெலோ மற்றும் ஈபிஆர்எல்எவ் போன்றன அரசாங்கத்துடனான தமது உறவை மட்டுப்படுத்தி தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் இன்று வரை பயணிக்கின்றன. உள்வாங்கப்படாத புளொட்டும் ஈபிடிபியும் தான் இறுதிவரை அரசாங்கத்துடன் இணைந்திருந்து தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் பலவற்றில் ஈடுபட்டு வந்துள்ளன.

தொடக்கத்திலேயே இவர்களையும் கூட்டமைப்புக்குள் உள்வாங்கியிருந்தால் சில வேளை துரோகிப் பட்டம் தேவையற்றதாக மாறியிருக்கக்கூடும். எனவே வெளியில் விடுவதை விட உள்ளே இருப்பது நன்மையாகவும் அமையலாம். போராளிகளின் அரசியல் கட்சி சந்திரகுமாருடன் கூட்டு வைத்துள்ளார்கள். நூற்றுக்கணக்கான போராளிகள் சந்திரகுமாரின் பின்னால் நிற்கின்றார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியத்துக்காகப் போராடிய பலர் இணைந்து செயற்படும் போது மற்றவர்கள் இணைந்து செயற்படுவதில் எந்தத் தடையும் இருக்கமுடியாது.

விடுதலைப்புலிகள் வன்முறையாளர்கள், இனச்சுத்திகரிப்பாளர்கள், அவர்களின் கடத்தல்களும் விசாரிக்கப் பட வேண்டும், இனப்படுகொலை என்று சொல்ல முடியாது என்று சத்தியம் செய்த சுமந்திரனை அன்ரன் பாலசிங்கத்துக்கு நிகரானவரான ஏற்க முடியுமென்றால் சந்திரகுமாரையோ அல்லது வேறு எவரையோ ஏற்பதில் அதிக சிரமமிருக்காது. ஒவ்வொருவரும் தமது தேவைகளுக்காக சமரசம் காண முடியுமென்றால் மக்களின் நலனுக்காக ஏன் சமரசம் காண முடியாது? தவறுகள் வெளியே தெரியாதவரை எல்லோரும் யோக்கியர்களே. இங்கு யாரும் புனிதமானவர்கள் கிடையாது. இங்கு வேறுபடுவது ஒவ்வொருவரின் துரோகத்தின் அளவும் பண்பும் மட்டுமே. மாறி வரும் அரசியல் சூழ்நிலையைப் தமிழ் அரசியல்வாதிகள் புரிய மறுத்தால் எதிர்காலத்தில் அவர்கள் எல்லோருமே மக்களின் பார்வையில் இனத்துரோகிகள் தான். தமிழ் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமெனில் கடந்தகால அனுபவங்களிலிருந்து புதிய சிந்தனைகள் உருவாக வேண்டும். அச்சிந்தனைகள் வழமை போன்று வெறுமனே தேர்தல் நோக்கிலானவையாக அமையக்கூடாது.

# முகத்தில் கரி:- மீனுக்கு தலை தான் முதலில் அழுகுமாம்!

கட்டுரையாளர்:
- அழகு.குணசீலன் -

இலங்கையின் கடந்த 75 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் 'இந்தத் தலைப்பு' பலமுறை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைகளை பறிக்க நசிக்க பயன்படுத்தப்பட்ட இந்த பாராளுமன்ற பெரும்பான்மை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி அமைப்பின் அதிகார மையத்தில் ஊழல், இலஞ்சம், நிர்வாகம், சட்டம், நீதி துறைகளின் தலையீட்டினூடான அதிகார துஷ்பிரயோகத்திற்கு பெரிதும் வழி வகுத்துள்ளது.

இவை அனைத்தையும் ஒழிப்போம் என்று மக்களுக்கு தேர்தல் வாக்குறுதியை அளித்து ஆட்சியில் அமர்ந்துள்ள இன்றைய ஜே.வி.பி.: என்.பி.பி ஆட்சியாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல என்பது அவர்கள் ஆட்சிக்கு வந்து மிகக் குறுகிய காலத்தில் பல முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. அவற்றில் சமகால பேசு பொருளாக நிலக்கரி ஊழல் மாறியிருக்கிறது.


இந்த அரசாங்கமும், அதன் தலைமையும் போதைப்பொருள், இலஞ்சம், ஊழல், குற்றச்செயல்கள் .... ஒழிப்பில் மிகக்கடுமையாக நடந்து கொள்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இது சர்வதேச வலைப்பின்னல் ஒன்றின் – பலவற்றின் பின்னணியைக் கொண்டது. அரசாங்கத்தின் இன்றைய பொருளாதார சிக்கலில் இவற்றை செய்ய வேண்டிய கட்டாயமும் உள்ளது.

சர்வதேச அனுபவங்களின் படி இந்த தேசவிரோத செயல்களை ஒழிப்பதில் ஒரு தேசிய அரசாங்கம் ஒரு வரையறைக்குள்ளேயே செயற்பட முடியும். என்.பி.பி. ஆட்சியில் இடம்பெற்ற இந்த ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில், தொடரும் இந்த குற்றச் செயல்கள் குறித்த நாளாந்த செய்திகள் கவலையளிப்பதாகவே உள்ளன. ஒரு வகையில் நாட்டிற்குள் இடம் பெறுகின்ற பாதாள உலகக் கோஷ்டிகளின் துப்பாக்கி சூட்டு கொலைக் கலாச்சாரம் ஓரளவுக்கு கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. மறு பக்கத்தில் சர்வதேச மாபியா பின்னணியிலான குற்றச்செயல்களை இலங்கை தனது ஆட்புல சட்டவரையறைக்குள் மட்டும் நின்று கட்டுப்படுத்த முடியாது என்பதை அரசாங்கத்தின் நாளாந்த புள்ளிவிவரங்கள் பேசுகின்றன.

கடந்த கால அரசாங்கங்களின் ஊழல்கள், சட்டவிரோத செயற்பாடுகளை நீதியின் முன் நிறுத்துவது என்பது இந்த அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதி. அந்த திசையில் பல கைதுகள், விசாரணைகள் நடந்துள்ள போதும் முன்னேற்றங்கள் குறைவாகவே உள்ளன. இதற்கு இடையில் கடந்த காலத்தை கழுவுவதை விடவும் தனது ஆட்சியின் சமகாலத்தை கழுவி துப்பரவு செய்ய வேண்டிய நிலை ஜே.வி.பி– என்.பி.பி. அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள், அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ளார்கள்.

இதில் பாதுகாப்பு தரப்பினர் சம்பந்தப்பட்டிருக்கும் 'வேலியே பயிரை மேயும் அரசியல்' இன்னும் மோசமானது. மேலும் எதிர்த்தரப்பையும், அரசாங்கத் தரப்பையும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தனது கோஷத்தின் படி அரசாங்கம் கையாயாளவில்லை என்பதற்கு மிகக் குறைவான காலத்தில் அதிகமான உதாரணங்கள் உண்டு. இந்த இடத்தில் தான் காலம் கடந்து பதவியை இராஜினாமா செய்துள்ள எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி மீதான நிலக்கரி ஊழல் குற்றச்சாட்டு









வந்து நிற்கிறது. இந்த விவகாரம் அமைச்சர், அமைச்சு அதிகாரிகளோடு மட்டும் சார்ந்த விடயம் அல்ல. இது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அமைச்சர், அமைச்சின் செயலாளர், மற்றும் அமைச்சரவையின் தலைவராக ஜனாதிபதி, ஜனாதிபதியின் கீழான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்ட ஒரு பாராளுமன்றத்தின் செயற்பாடுகள்.... போன்ற பல விடயங்களால் சூழப்பட்ட ஒன்று. இது விடயத்தில் ஜனாதிபதியும், அமைச்சரவையும், பெரும்பான்மை பாராளுமன்றமும் செயற்பட்ட முறைகள் கட்சி அரசியல் அற்ற, அரசியல் நேர்மை தவறாத, சட்டத்தை மதிக்கும், தனிப்பட்ட உறவுகளை கடந்த ஒரு அரசியல் அணுகுமுறையா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

இதற்கு இல்லை என்பது தெளிவான பதிலாக இருக்க முடியும். இந்த வகையில் அமைச்சர் குமார ஜெயக்கொடியினதும், அவரது அமைச்சு செயலாளரதும் இராஜினாமா காலம் கடந்த, ஒன்று மட்டும் அல்ல அநுர அரசாங்கம் கண்கெட்ட பின்னர் செய்யும் சூரிய நமஸ்காரமுமாகும்.

வெள்ளிக்கிழமை வரை ஜெயக்கொடியை காப்பாற்ற பிடிவாத விரதம் இருந்த அரசாங்கம் தீடீரென அவரே ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு, இடையூறு இல்லாமல் இருக்க தானாக பதவி விலகியுள்ளதாக கதை எழுதுகிறது. உண்மையில் இந்த நேர்மை அரசாங்கத்திற்கும், அமைச்சருக்கும் இருந்திருந்தால் பல மாதங்களாக தொடரும் இத்தனை இழுபறிகளுக்கும், விமர்சனங்களுக்கும் இடமில்லாமல் போயிருக்கும்.

இன்றைய நிலையில் அரசாங்கமே தனக்கு தானே அதன் மீதான மக்களின் நம்பிக்கையிலும், அது பேசிய ஊழல் அற்ற ஆட்சியிலும், பாராளுமன்ற பெரும்பான்மையை மக்கள் நலனுக்கே பயன்படுத்துவோம்.... போன்ற கதையாடல்களுக்கும் சேதாரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இடம் பெற்றுள்ள இராஜினாமா நாடகம் உண்மையில் அரசாங்கம் உள்ளேயும், வெளியேயும் எதிர் கொண்ட. அழுத்தங்களை தாக்குபிடிக்க முடியாததால் எடுக்கப்பட்ட முடிவு. இந்த முடிவை எடுப்பதற்கு அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் போதுமான கால அவகாசமும், சரியான பல சந்தர்ப்பங்களும் இருந்தன. இரு தரப்பும் இந்த வாய்ப்புக்களை பயன்படுத்தி கொள்ளவில்லை. மாறாக பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி என்று எல்லோரும் சேர்ந்து வெள்ளையடித்து அமைச்சரை காப்பாற்றும் முயற்சியிலேயே ஈடுபட்டனர்.

புத்தாண்டு விடுமுறைக் காலத்திற்கு பின்னரும் இந்தப் பாதையை தொடர முடியாத நிலை அமைச்சருக்கும், ஜனாதிபதிக்கும் ஏற்பட்டது. விளைவு: ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை என்ற கோதாவில் ஜனாதிபதியின் வற்புறுத்தலில் அமைச்சர் ஜெயக்கொடி இராஜினாமாச் செய்ய தூண்டப்பட்டார். ஒரு வகையில் ஜெயக்கொடிக்கு எதிராக இன்னொரு நீதிமன்ற விசாரணையை தடுக்கும்: பிற்போடும் தந்திரோபாயமாகவே இந்த இராஜினாமாவை நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் அவர் மற்றொரு உர ஊழலில், பிணையில் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேக நபர். இதுவும் நீதிமன்றத்திற்கு போனால் அதை ஜே.வி.பி. தாங்கினாலும் என்.பி.பி.தாங்காது.

ஜனாதிபதிக்கும், அமைச்சருக்கும் இருந்ததும், அவர்களால் அலட்சியம் செய்யப்பட்ட தவறிய சந்தர்ப்பங்களை பார்ப்போம்.

(1) தென்னாப்பிரிக்க நிலக்கரி கொள்வனவில் தவறான ஒப்பந்த நடைமுறை, இந்திய நிறுவனம் வழங்கிய தரம் குறைந்த நிலக்கரி, அதனால் ஏற்பட்ட மின் உற்பத்தி வீழ்ச்சி, செலவு அதிகரிப்பு, சுற்றாடல் மாசுபடல் போன்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்ட போது அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. அது மட்டும் அன்றி ஆரம்பத்தில் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்றே பொய்யுரைத்தது.

(2) எதிர்க்கட்சிகளும், பாராளுமன்ற தெரிவுக்குழுவும் இந்த விவகாரம் குறித்து விவாதித்த போதும், கேள்வி எழுப்பிய போதும் அரசாங்கத்தின் கண்களிலும், காதுகளிலும் அது விழவில்லை. பாராளுமன்றத்தில் சமகால தவறை சுட்டிக் காட்டினால், கடந்த கால தவறை சுட்டிக்காட்டும் விதண்டாவாதம் அரசாங்க தரப்பில் முன்வைக்கப்பட்டது. ஒரு தவறை இன்னொரு தவறைச்சொல்லி மறைக்கும் அரசியல்.

(3) அறகலயவின் பங்காளிகளும், அமெரிக்க பின்னணியை அறியாது அநுர அரசின் ஆட்சிக்கு வழி வகுத்தவர்களுமான முன்னிலை சோஷலிசக்கட்சியினர் துறைசார்ந்த நிபுணத்துவத்துடன் புள்ளிவிபரங்களையும், தரவுகளையும் விஞ்ஞான பூர்வமாக முன் வைத்த போது கல்வியாளர்களையும், கலாநிதிகளையும் கொண்ட அரசாங்கம் அதை ஏடெடுத்தும் பார்க்கவில்லை.

(4) இலங்கையின் சமூக அமைப்புக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சட்டத்துறையினர், சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகள், மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்புக்கள் விடுத்த அனைத்து கோரிக்கைகளும் கிடப்பில் போடப்பட்டன.

(5) எதிர்கட்சிகளின், அமைச்சர் ஜெயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் அரசாங்கம் பெரும்பான்மை பாராளுமன்ற ஜனநாயகத்தை துஷ்பிரயோகம் செய்து பிரேரணையை தோல்வியுறச் செய்தது. அன்றைய தினம் பாராளுமன்ற வளாகத்திற்கு முன்னால் எஸ்.ஜே.பி. ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்கள் போராட்டமும் கருத்தில் கொள்ளப்படவில்லை.

(6) இதுவரை அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளை கூட மனச்சாட்சிக்கு விரோதமாக நியாயப்படுத்தி வெள்ளையடித்த அரசாங்க ஆதரவு கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் தேவசிறி அதற்காக வெட்கப்பட்டு, இனியும் வெள்ளையடிக்கப் போவதில்லை என்ற போதும் ஜனாதிபதிக்கும், அமைச்சருக்கும் வெட்கம் வரவில்லை. தேவசிறியை இந்தளவு நகர்த்தியது நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் அரசாங்கம் நடந்து கொண்டவிதமும், கணக்காய்வு அறிக்கையும்தான்.

(7) மூன்று அழுத்தங்கள் ஒன்றாக சேர்ந்தபோது ஜனாதிபதியாலும், அமைச்சரவையாலும் அதற்கு தாக்குப்பிடிக்க முடியாமல் 'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற பாணியில் ஜனாதிபதி ஆணைக்குழு, அமைச்சரதும் செயலாளரதும் இராஜினாமா என்பன நடந்தேறியுள்ளன

ஒன்று: கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை. நம்பிக்கைகள் இல்லாப் பிரேரணை காலத்தில் கல்லும் தேங்காயும் சந்தித்த போல் சரியான நேரத்தில் வெளி வந்ததால் அரசாங்கம் ஆடிப் போனது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கும், நீதிமன்றத்தில் ஜெயக்கொடியை நிறுத்துவதற்கும் அந்த அறிக்கை தட்டிக் கழிக்க முடியாத உறுதியான சாட்சியம்–ஆதாரம்.

இரண்டு: என்ன தான் இருந்தாலும் ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வாவினதும், அவரது அணியினரதும் அழுத்தம், பல வாரங்கள் கடந்து பலித்திருக்கிறது. பெலவத்தை, காலி முகத்திடல் அதிகார பீடங்களுக்கு இடையே புத்தாண்டுக்கு முன்னரும், பின்னரும் பலத்த கருத்து மோதல்கள் இடம் பெறுள்ளன. ஜெயக்கொடி பதவி விலக வேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும் என்பதில் ரில்லவின் அணி பலமாக இருந்துள்ளது. இதனால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் (13ம் பக்கம் பார்க்க).

# மருத்துவக் குறிப்புக்களைத் தவிர்ப்போம்!

உடல் எடையைக் குறைப்பதற்காக இணையம் மற்றும் யூ-டியூப் விடியோக்களைப் பார்த்து சுயமாக சிகிச்சை மேற்கொண்ட கேரளத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் அனரெக்சியா நெர்வோஸோ என்ற மனநலன் சார்ந்த உணவு, பசியின்மை நோயால் பாதிக்கப்பட்டு அண்மையில் உயிரிழந்த செய்தி வருத்தத்தை தந்தது.

உடல் எடை குறித்த மனநோயான இந்த 'அனரெக்சியா நேர்வோஸோ' என்பது இந்தியாவில் 15 முதல் 19 வயதிலான ஒரு லட்சம் இளம்பெண்களில் 37.5 சதவீதம் பேருக்கு உள்ளதாக மருத்துவ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதேபோன்று இந்த வகை நோயால் கடந்த 2016-ஆம் ஆண்டு காலகட்டத்தில் மட்டும் சுமார் 55 இளம் பெண்கள் உயிரிழந்ததாக தரவுகள் தெரிவிக்கின்றன.

மதுரையைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவர், உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வெண்காரம் எனப்படும் வேதிப்பொருளை உட்கொண்டு உயிரிழந்தார்.

'போராக்ஸ்' எனப்படும் இந்த வேதிப்பொருள் பெரும்பாலும் பூச்சிக்கொல்லிகள், பீங்கான் தயாரிப்பு மற்றும் சலவைப் பொருள்களில் பயன்படுத்தப்படுவதாகும். மேலும், உடல் இளைப்பதற்காக 'படிகாரம்' உட்கொண்ட கேரள இளம்பெண் உடல் பாதிப்புக்குள்ளானார். படிகாரம் எனப்படுவது 'பொட்டாசியம் அலுமினியம் சல்பேட்' எனப்படும் வேதிப்பொருளாகும்.

இது போன்று இணையத்தைப் பார்த்து பிரசவம் பார்ப்பது, தவறான முறைகளில் உடற்பயிற்சிகள், தியானம், யோகா போன்றவற்றை பலரும் செய்து வருவது இன்றைய கால கட்டத்தில் அதிகரித்து வருகிறது.

இன்று இணையத்துக்குள் சென்றாலே எண்ணற்ற மருத்துவக் குறிப்புகள் வருகின்றன. பலரும் மருத்துவம் படிக்காமலே மருத்துவம், மருத்துவ சிகிச்சைகள் குறித்துப் பேசுகின்றனர். இதில் சித்த மருத்துவம் மற்றும் மூலிகை மருத்துவம் குறித்து பலர் பேசுவது அதிகமாக உள்ளது.



ஆனால், இது குறித்துப் பேசுபவர்கள், மருத்துவத்தையும், பயிற்சிகளையும் மேற்கொண்டு பலனை அனுபவித்தவர்களா என்பது தெரியவில்லை. எல்லாக் குறிப்புகளையும் தெரிவித்து விட்டு கடைசியில் தக்க மருத்துவ ஆலோசகர்களின் அறிவுரைப்படி பயன்படுத்த வேண்டும் என்ற வாசகத்தையும் பயன்படுத்துகிறார்கள்.

இணையவழி மருத்துவ முறைகள், உடற்பயிற்சி முறைகளைப் பயன்படுத்துவர்கள் இந்த வாசகத்தை அலட்சியம் செய்துவிட்டு நேரடியாக செய்முறை பயிற்சியில் இறங்குவது தான் இத்தகைய விளைவுகளுக்கு முதன்மைக் காரணங்களாக அமைகின்றன. சித்த மருத்துவம், மூலிகை மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவது தவறில்லை. ஒவ்வொரு நோய்க்கும் அதன் தன்மைக்கேற்ப அளவுகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை பாடல்கள் வாயிலாக சித்தர்கள் தெரிவித்துள்ளனர்.

உடல் பருமன் குறித்துப் பல்வேறு எதிர்மறையான செய்திகளை மருத்துவ உலகமும் சமூக ஊடகங்களும் பரப்பி வருவது தான் இதற்கு முக்கியக் காரணமாகும். முதலில் பொதுமக்கள் ஒரு விஷயத்தை உணர வேண்டும். ஒல்லியாக இருப்பவர்கள் எல்லாம் முழுமையான ஆரோக்கியமானவர்களும் அல்லர் அதிக உடல் எடையுடன் இருப்பவர்கள் ஆரோக்கியமற்றவர்களும் அல்லர். இது அவரவர் குடும்ப மரபு வழி தன்மையாகக்கூட இருக்கலாம். அதற்காக உடல் எடையைக் குறைக்க சிலர் கூறும் தேவையற்ற அறிவுரைகளையும், மருத்துவக் குறிப்புகளையும் கேட்பதைத் தவிர்க்க வேண்டும். ஊடகங்களில் சிலர் கூறும் அனைத்து மருத்துவ முறைகளின் உண்மைத் தன்மையை யாரும் இதுவரை முழுமையாக அறிந்தது இல்லை. சிலர் புத்தகங்களில் தாங்கள் படித்த ஒரு சில விஷயங்களை வைத்துக் கொண்டு அதன் மூலம் பொருள் ஈட்ட முயல்வதே இது போன்ற நிகழ்வுகளுக்குக் காரணமாகின்றன.

ஒரே மருந்தை காலையில் உட்கொண்டால் ஒரு பலனும், மாலையில் உட்கொண்டால் வேறு பலனும் கிடைக்கும் என சித்த மருத்துவ நூல்கள் தெரிவிக்கின்றன. கற்றுத்தேர்ந்த சித்த மருத்துவர்கள் அல்லது மூலிகை மருத்துவ நிபுணர்களை நேரடியாக சந்தித்து உரிய தீர்வு பெறுவதே முறையாகும். மாறாக, சமூக ஊடகங்களில் வரும் மருத்துவம் சார்ந்த செய்திகளை முழுமையாக நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போன்றதாகும்.

சமூக ஊடகங்களில் ஆரோக்கியம் தொடர்பான தகவல்களை மேற்கொள்ள முயற்சிக்கும் போது, அதன் நம்பகத் தன்மையை ஆராய வேண்டும் அல்லது நிபுணர்களை அணுகுவது அவசியம். சமூக ஊடகங்கள் பல நல்ல விஷயங்களையும் நமக்குத் தருகின்றன. அதே நேரத்தில், மருத்துவம் சார்ந்த செய்திகளை உடனடியாக அப்படியே பின்தொடர்வது தவறான ஒன்றாகும். உடல் அமைப்புகள் நம் உற்சாகத்தை உயர்த்துவதில்லை. நம்முடைய மனம் சார்ந்த எளிய உணர்வுகளும், உடற்பயிற்சி போன்ற முறைகளே நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்க பெரிதும் உதவுகின்றன. உடல் அமைப்பு என்பது, நமது மூதாதையர்களின் பாரம்பரிய மரபணுக்கள் மற்றும் மரபுவழி தன்மைகளைப் பொருத்தது. அதை தவறான செய்திகள் வாயிலாக நம்மை நாமே சிதைத்துக் கொள்ளக் கூடாது. (தினமணி)


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


Sparkline
ENTERTAINMENT INC.
PASS
MEDIA
SWARA SANGAMAM
2026
PICKERING CASINO RESORT
June 06, 2026 | 6:01 PM
(647) 336-5529
sparklinecanada@gmail.com
Dr. Sivakumar Nagamuttu MD
Medical, Cosmetic & Laser Clinic
1-1250Castlemore Ave. Markham ON L6E 0H7
reception@drsiva.ca
(905) 554 9400
www.drsiva.ca
ELITE MD AESTHETICS
102.7
east
FM
தமிழ்
வெற்றிகொள் தமிழா!
Shan Thayaparan
416.567.7675
shan@shan123.com
RE/MAX
Conditions apply *.©All rights reserved by Sparkline Entertainment Inc.



VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
APRIL 25
SATURDAY@ 5:30PM
The Theatre at GREAT CANADIAN TORONTO
1133 Queen's Plate Dr, Toronto, ON M9W 0G4
(Free Parking)
TRAVEL PARTNER
VMS TRAVEL
Tel: 416.293.5800
Get Your Tickets at ticketmaster.ca starting from $45
NEW PROMOTERS AUTO CENTRE
T:416.285.8608 / 416.752.9797
THANKS TO
east FM 102.7
TITLE SPONSOR
Effective. Responsive. Caring
HIMPRO
By HIMELFARB PROSZANSKI
POWERED BY
TCS Top Choice Solutions
"For all your transportation needs"
DOVE SQUARE PROPERTY MANAGEMENT INC.
T: 416-335-3683
Tisant Rajaratnam
Sales Representative
TISANT RAJARATNAM
RE/MAX COMMUNITY
S P CHARAN
THIVANESH
SUSANTHICA
SREEHARI
SHIVANI
CHINNU SENTHAMILAN
SAPESAN
PAVITRA
Sa Re Ga Ma Pa 2026
தென்னிந்திய இசைக் கலைஞர்கள்
ROUGE BAKERY
MEDIA PARTNERS
ஈழநாடு
மகிழ்ச்சி MAKILCHI
CATERING PARTNER
SOUTHERN AROMA
Tel: 416-837-7454
VENUE PARTNER
ARYLIA Productions
GOLD SPONSORS
LIFT 24/7 TOWING SERVICE
LIFT-Towing & Auto Services
416-473-3855 | 416-879-5267
INSURANCE FOR THE HIGH-NET-WORTH
Prem Arasaratnam
INSURANCE BROKER
BIG
416 845 3000
prem@thebig.ca
NEW PROMOTERS AUTO CENTRE
Complete Automotive Service & Repairs
773 Warden Ave. Unit 8 Scarborough ON M1L 4C3
T:416.285.8608 / 416.752.9797
GOLD SPONSORS
Platinum CAR & TRUCK RENTAL
416-613-1811
Netwyn.Place
MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
inter-citi LOGISTICS
PHOTO FAST WORLDWIDE SHIPPING CENTRE
416-230-3733
JUDE ANTHONYPILLAI
தொடர்புகளுக்கு: 647-612-4166 | 647-655-9531 | 647-621-7889 | VIP|VVIP 647-594-9573



Secure. Grow. Protect.

Your Future, Your Terms - Protect What Matters

KRISHNA SABARATNAM
Insurance & Investments

I'm here to help! Call now

416-846-2685

Krishna.gsabaratnam@gmail.com

10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.


# இலங்கைத் தமிழர் மூவர் வாகன விபத்தில் கொல்லப்பட்ட சம்பவத்தில் சாரதி மீதான குற்றச்சாட்டுக்களைத் தள்ளுபடி செய்த அதிர்ச்சிகரமான தீர்ப்பு!

கனடாவில் இலங்கைத் தமிழர்கள் மூன்று பேர் கொல்லப்பட்ட வழக்கில், சாரதி மீதான குற்றச்சாட்டுகளை நீதிபதி தள்ளுபடி செய்துவிட்ட விடயம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் திகதி, கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள மார்க்கம் நகரில், இலங்கைத் தமிழர்களான ஸ்ரீரதி சண்முகநாதன் (52) அவரது பிள்ளைகளான பதீரன் புவனேந்திரன் (21), நிலுஷ்சனா புவனேந்திரன் (23) ஆகியோர் கார் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது சிக்னலில் எரிந்து கொண்டிருந்த சிவப்பு விளக்கை மீறி வந்த ட்ரக் ஒன்று அந்தக் கார் மீது மோதியது. அந்த விபத்தில், பதீரனும் நிலுஷ்சனாவும் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, படுகாயமடைந்த ஸ்ரீரதி பின்னர் மருத்துவமனையில் மரணமடைந்தார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் விபத்தில் பலியான துயரத்திலிருந்து விடுபட அவர்களுடைய குடும்பம் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் அந்த வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு, அக்குடும்பத்துக்கும் கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், விபத்தை ஏற்படுத்தி மூன்று உயிர்கள் பலியாகக் காரணமாக இருந்த ட்ரக்கின் சாரதியான அந்தோனி பக்லியேரி மீதான குற்றச்சாட்டுகளை நீதிபதி தள்ளுபடி செய்துவிட்டார்.

வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதியான மார்க் எட்வர்ட்ஸ் ( Mark Edwards), அந்த விபத்து துயரத்தை உருவாக்கியது உண்மை தான் என்றாலும், சாரதியின் செயல்கள் குற்றச்செயல்கள் அல்ல என பொலிசார் முன் வைத்த ஆதாரங்கள் மற்றும் தான் நடத்திய குறுக்கு விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

ட்ரக் சாரதியான அந்தோனி வாகனம் ஓட்டும்போது மது அருந்தியிருக்கவில்லை என்றும் அதிவேகமாக வாகனத்தை ஓட்டவில்லை என்றும் கூறியுள்ள நீதிபதி, வாகனம் ஓட்டும்போது முகத்தில் அடித்த சூரிய ஒளி, ட்ரக்கில் சாரதி அமர்ந்திருந்த இடம் அவரால் மற்ற வாகனங்களை சரியாக பார்க்க அனுமதிக்காதது மற்றும் எதிரே அவசர உதவி வாகனங்கள் வந்ததால் அந்த வாகனங்களில் எரிந்து கொண்டிருந்த பளீர் ஒளி விளக்குகள் ஆகியவை அவரது கவனத்தை திசை திருப்பிவிட்டதாக தெரிவித்துள்ளார்.



அந்த சாரதி தனது 12 ஆண்டுகால பணியில் ஒருமுறை கூட விபத்தை ஏற்படுத்தியதில்லை என்றும், தான் சிக்னலில் பச்சை விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது என நினைத்ததாக தனது பணி வழங்குவோரிடம் அவர் கூறியதாகவும், அவரது கவனத்தை திசை திருப்ப காரணமாக இருந்த விடயங்கள் அவரது தரப்பு வாதத்தை விளக்குவதாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார் நீதிபதி.

இந்த தீர்ப்பு, உயிரிழந்தவர்களுடைய குடும்பத்தினருக்கும் கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


தீர்ப்பைக் கேட்ட பதீரன், நிலுஷ்சனாவின் தந்தையும், ஸ்ரீரதியின் கணவருமான புவனேந்திரன் பூபாலசிங்கம், கடவுளே, என் வாழ்க்கையே போய் விட்டது, மூன்று உயிர்கள், இரண்டு சின்னப் பிள்ளைகள், இன்று எனக்கு நேரிட்டது நாளை யாருக்கு வேண்டுமானாலும் நேரிடலாம் என கண்ணீர் விட்டுக் கதற, நீதிமன்றம் முன் கூடியிருந்தவர்கள், நீதி வேண்டும் என முழக்கமிட்டுள்ளார்கள்.

இது நியாயமல்ல என அவர்களுடைய குடும்ப நண்பர் ஒருவர் கூறியுள்ள நிலையில், தங்களுக்கு நீதி வேண்டும் என்றும் தாங்கள் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வரலாற்றிலேயே மிகப்பெரிய எரிசக்தி நெருக்கடி!

ஈரான் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு இடையேயான மோதல், உலகம் இதுவரை கண்டிராத மிக மோசமான எரிசக்தி நெருக்கடியை உருவாக்கி வருகிறது என்று பன்னாட்டு ஆற்றல் முகாமையின் (IEA) தலைவர் 21ஏப்ரல் 2026 செவ்வாயன்று தெரிவித்தார்.

இது குறித்து பிரான்ஸ் இன்டர் வானொலிச் செய்திச் சேவைக்கு பன்னாட்டு ஆற்றல் முகாமையின் தலைவர் பீரோல் அளித்த செவ்வியில், இது உண்மையிலேயே வரலாற்றிலேயே மிகப்பெரிய நெருக்கடி.



ரஷ்யாவுடனான பெட்ரோல் மற்றும் எரிவாயு நெருக்கடியின் விளைவுகளையும் சேர்த்தால், இந்த நெருக்கடி ஏற்கனவே மிகப் பெரியது என்றார்.

மத்திய கிழக்கில் நடக்கும் போர், உலகளாவிய எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவின் ஐந்தில் ஒரு பங்கு ஓட்டப் பாதையாக விளங்கும் ஹார்முஸ் நீரிணையில் கடல்வழிப் போக்குவரத்தை முடக்கியுள்ளது. மேலும், இது ஏற்கனவே ஐரோப்பாவிற்கான ரஷ்ய எரிவாயு விநியோகத்தைத் துண்டித்திருந்த, உக்ரேனுடனான ரஷ்யாவின் போரின் விளைவுகளுக்கு மேலாக வந்துள்ளது. உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் நிலவும் தற்போதைய நிலைமை, 1973, 1979 மற்றும் 2022-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முந்தைய நெருக்கடிகளின் கூட்டுத் தொகையை விட மோசமானது என்று தாம் கருதுவதாக பைரோல் இந்த மாத தொடக்கத்தில் கூறியிருந்தார்.

மார்ச் மாதத்தில், ஈரானுடனான அமெரிக்க இஸ்ரேலியப் போரினால் ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வைச் சமாளிப்பதற்காக, மூலோபாய கையிருப்புகளில் இருந்து சாதனை அளவாக 400 மில்லியன் பீப்பாய் எண்ணெயை வெளியிட பன்னாட்டு ஆற்றல் முகாமை ஒப்புக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.